# அத்தியாவசிய சேவை பிரகடனம் வருமா?

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 304
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கார்த்திகை 29 ஷவ்வால் 4 ஞாயிற்றுக்கிழமை [14-12-69]

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒருவருடம் — ரூ. 66-00

## அவசியம் இல்லையென பிரதமர் கருதுகிறாராம்

கோட்டை, சனி

வேலைநிறுத்தங்கள் நீடித்துவருவதாலும் அவை முடிவடைவதற்கான அறிகுறிகள் தென்படாததாலும் ரயில் சேவை, துறைமுகசேவை அத்தியாவசிய சேவைகளாக எந்தச்சமயத்திலும் பிரகடனப்படுத்தப் படலாமென அரசாங்க வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

ரயில் என்ஜின் சாரதிகளினதும் கார்டுகளினதும் வேலைநிறுத்தம் 12-வது தினமாகவும் துறைமுக ஊழியரின் வேலைநிறுத்தம் இரண்டாவது தினமாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வேலைநிறுத்தங்களை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சிகள் வெற்றியளிக்காததைத் தொடர்ந்து பாதுகாப்புநடவடிக்கைகளும் அத்தியாவசிய வேலைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## இலங்கைக்கு வந்த அரிசிக் கப்பல் ஹொங்கொங்கில் தரைதட்டி நிற்கிறது

ஹொங்காங், டிச.13

சீனாவிலிருந்து அரிசி ஏற்றிக்கொண்டு இலங்கைக்கு வந்த கப்பல் ஒன்று ஹொங்காங்கிற்குச் சமீபத்தில் தரைதட்டி நின்றுவிட்டதாகச் செய்திகள் கிடைத்துள்ளன.

பத்தாயிரம் தொன் அரிசியுடன் இந்தக்கப்பல் இலங்கைக்கு வந்து கொண்டிருந்ததாகத்தெரிகிறது.

இந்தக்கப்பலிலுள்ளமாலுமிகளைக்கரை சேர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## ஒரேபார்வையில் வேலை நிறுத்தங்கள்

| | | |
|---|---|---|
| 0 | புகையிரதப்பகுதியினர் | 13-வது தினம் |
| 0 | ஆஸ்பத்திரி தொழில்நுட்பஊழியர் | 17- ,, |
| 0 | சுருட்டுத் தொழிலாளர் | 13- ,, |
| 0 | பசளை கூட்டுத்தாபன ஊழியர் | 11- ,, |
| 0 | உடுக்கு கூட்டுத்தாபன ஊழியர் | 9- ,, |
| 0 | லக்கி கைத்தொழிற்சாலை ஊழியர் | 118- ,, |
| 0 | களுத்துறை மோட்டார் ஸ்தாபன ஊழியர் | 94- ,, |
| 0 | முகத்துவாரம் வாக்கர்ஸ் ஊழியர் | 36- ,, |
| 0 | கொழும்பு பல்கலைக்கழக மாணவர் | 10- ,, |
| 0 | வித்தியாலங்கார மாணவர் | 8- ,, |
| 0 | அவிசாவளை பஸ் ஊழியர் | 4- ,, |
| 0 | துறைமுக தொழிலாளர் | 3- ,, |

### உத்தேச வேலைநிறுத்தங்கள்

0 சுங்க பகுதியினர்
0 ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஊழியர்
0 ஆஸ்பத்திரி தாதிமார் சங்கம்
0 தபால், தந்தி ஊழியர்

## 'சிங்களதேர்ச்சி பிரச்னையில் நாம் என்ன செய்தோம்?'

அல்லைப்பிட்டி, சனி

''தமிழ் அரசாங்க ஊழியர் சிங்கள மொழித் தேர்ச்சி பெறவேண்டுமென்ற பிரச்னையில் தமிழரசுக்கட்சி அரசாங்கத்துடன் அரசியல் ரீதியிலான ஒருமுடிவையே எடுத்தது. ஆனால் அரசாங்கம் தன் பொறுப்பைத் தட்டிக்கழித்து சிங்களத்தேர்ச்சி என்ற போர்வையில் பல கொடுமைகளை தமிழ் அரசாங்க ஊழியருக்குச் செய்து வருகிறது. அன்னிய ஆட்சிக் காலத்தில் ஆங்கிலம் அரசாங்க மொழியாக இருந்த போதும்கூட ஆங்கிலத் தேர்ச்சிவேண்டுமென்று அன்[...]தர் கா. பொ. இரத்தினம் குறிப்பிட்டார்.

திரு. சி. கந்தவனம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. இரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''தமிழ்மக்களுக்கு சட்டமூலமும், திறைச்சேரிச் சுற்[...]கைகள் மூலமும் தருவ[...]கூறிய தமிழ் உரிமைகளைக்கூடத்தருவதற்கு அரசாங்கம் பின்வாங்குகிறது. நாளாந்தம் ஆட்சிமன்றத்தில் கேள்விகள் மூலம் அரசாங்கத்தின் ஏமாற்று வித்தைகளை சுட்டிக்காட்டியே

## இரத்ததானம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

விஸ்வமடு விவசாயப்படையைச் சேர்ந்த 45 பேரும், ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த 18 பேரும் கடந்த வாரம் யாழ் ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு இரத்ததானம் செய்தார்கள்.

யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கி அதிகாரி டாக்டர் சி. ஏ. பிலிப்பையாவும், பிரசார அதிகாரி திரு. வி. சிவரத்தினமும் அங்கு சென்று இரத்தம் சேகரித்தனர்.

இதுசம்பந்தமாக டாக்டர் பிலிப்பையா பொதுமக்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோள் ஒன்றில் இரத்த விநியோகத்தில் வெளியார் [...]லர் முறையீனமாக [...]ந்து கொள்வதைத் தடுக்கத் தம்முடன் ஒத்துழைக்குமாறு தெரிவித்துள்ளார். [கா.நி]

## என்ஜின்சாரதிகள் 6 பேர் வேலைக்குத் திரும்பினர்

### ரயில்சேவை அதிகரிப்பு

புகையிரதபகுதி கார்ட்மார், சாரதிகள் வேலைநிறுத்தம் தொடர்ந்து நடந்துகொண்டிருந்த போதிலும் இன்று அறுபதுக்கு அதிகமான பிரயாணிகள் வண்டிகள் சேவையில் ஈடுபட்டுள்ளதாகவும் நாளை மேலும் பல பிரயாணிகள் வண்டிகள் சேவையில் ஈடுபடுமென்றும், அரசாங்க அறிக்கையொன்று தெரிவிக்கிறது.

வேலைநிறுத்தம் செய்து வந்த என்ஜின் சாரதிகளில் 6பேர் வேலைக்குத் திரும்பியுள்ளதாகவும் அந்த அறிக்கை மேலும் கூறுகிறது. சரக்குவண்டிகளின் சேவை வழக்கம்போல் நடைபெற்று வருகிறது. உணவு பொருட்களையும், எரிபொருட்களையும் ஏற்றிக்கொண்டு இன்று நாட்டின் பலபாகங்களுக்கும் சென்றன.

கொழும்பை சுற்றியுள்ள பகுதிகளுக்கு பிரயாணிகள் வண்டிகள் சேவை இன்று நடைபெற்றது. றம்புக்கனை, அளுத்கம, களனி பகுதிகளுக்கு இன்று சேவை நடைபெற்றன.

### துறைமுக வேலைநிறுத்தம்

கொழும்புத்துறைமுகத்தில் 7 தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தபோதும் வேலைகள் வழமைபோல் நடைபெறுவதாக கூட்டுத்தாபன தலைவர் தெரிவித்தார்,

கடற்படைவீரர்கள் துறைமுகங்களில் தயாராகநிற்கிறார்கள். காலி, திருக்கோணமலை கொழும்பு ஆகிய துறைமுகங்களில் சுமார் 20,000 ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்கின்றனர். துறைமுகத்தின் பிரதானவாரிகளிலும் மற்றும் முக்கிய இடங்களிலும் கடற்படையினரும் துறைமுகக் காவலரும் காவல்புரிந்து வருகின்றனர்

வேலைநிறுத்தங்கள் தொடர்ந்து நடைபெற்றுவந்தாலும் நிலைமை சீர்குலையாத முறையில் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதென்று நேற்றைய மந்திரி சபைக் கூட்டத்தில் பிரதமர் கூறியதாகத் தெரிகிறது. ஒன்பது அமைச்சுகளின்கீழ் அத்தியாவசிய வேலைகளைக் கவனிப்பதற்கு ஆயுதப் படைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதால் அவசரகால நிலைமையை இப்போது பிரகடனம் செய்ய வேண்டிய அவசியமில்லையென்று பிரதமர் கூறியதாகவும் அறியப்படுகிறது.

### ரயில் வேலைநிறுத்த எதிரொலி:

## விடுதலைபெற்ற கைதிகள் வீதிகளில் நடமாட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

புகையிரத சாரதிகளதும் [...] தாங்கள் ஊர்களுக்குச்செல்லாமல் இங்கு திரிவதாக

## அழியும் செல்வம் எது?

## வேலணை மே[...]கு

## காடைத்தனத்தை ஒழிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காடைத்தனத்தை ஒழிக்க பொலிஸ் பிரசாரம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
காடைத்தனங்களையும், களவு, கைகலப்பு போன்ற அசம்பாவிதங்களையும் தடுக்கும் பிரச்சார வேலைகளில் பொலிஸ் உயர் அதிகாரிகளே இப்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் உதவி பொலிஸ் சுப்பிரின்டன்ட் திரு. தர்மதாசா சில்வா, பொலிஸ் சுப்பிரின்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் ஆகியோர் தங்கள் கார்களில் ஒலிபெருக்கி அமைத்து இதுசம்பந்தமான பிரச்சாரங்களை செய்து வருகின்றனர்.

வழிப்பறி, கொள்ளை, காடைத்தனங்கள், டாக்ஸி மூலம் கடத்தல், எவ்வாறு நடைபெறுகின்றனவென்பது பற்றியும் இதனைத் தடுக்க பொதுமக்களும், டாக்ஸிச் சாரதிகளும் எவ்வாறு பொலிசாருடன் ஒத்துழைக்க வேண்டுமென்பது பற்றியும் இங்கு எடுத்துக் கூறப்பட்டது.

யாழ். பஸ் நிலையம், கச்சேரியடி, வண்ணார்பண்ணை, கொட்டடி, முஸ்லிப் பகுதி, பெருமாள் கோவிலடி, ஆரியகுளம் சந்தி, நல்லூர், முத்திரைச்சந்தை ஆகிய முக்கிய இடங்களில் கடந்த இரண்டு தினங்களாக இப்பிரச்சாரம் நடைபெற்றது. இது தொடர்ந்து நடைபெறும் என்றும் பொலிஸ் அதிகாரி ஒருவர் சொன்னார். (கா. நி.)

## இன்று ஜி. சி. ஈ. பரீட்சை

யாழ்ப்பாணம், ஞாயிறு
இன்றுகாலை ஆரம்பமாகும் ஜி. சி. ஈ. [சாதாரண] பரீட்சை நாட்டிலுள்ள 2,160 ஸ்தானங்களில் நடைபெறும். 3 லட்சம் பரீட்சார்த்திகள் தோற்றுகிருர்கள். 31ந் திகதிவரை பரீட்சை நடைபெறும்.

கொடுமைகளை தமிழ் அரசாங்க ஊழியருக்குச் செய்து வருகிறது. அன்னிய ஆட்சிக் காலத்தில் ஆங்கிலம் அரசாங்க மொழியாக இருந்த போதும்கூட ஆங்கிலத் தேர்ச்சிவேண்டுமென்று அன்னிய ஆட்சியாளர்கள் நிர்ப்பந்திக்கவில்லை''

மேற்கண்டவாறு வேலணை நாவலர் சன சமூக நிலைய முன்றலில் நடைபெற்ற தமிழரசு வாலிப முன்னணிக் கூட்டத்தில் பேசும்போது கிளிநொச்சி எம். பி. பண்டி தாக்கூறிய தமிழ் உரிமைகளைக்கூடத்தருவதற்கு அரசாங்கம் பின்வாங்குகிறது. நாளாந்தம் ஆட்சிமன்றத்தில் கேள்விகள் மூலம் அரசாங்கத்தின் ஏமாற்று வித்…ளை சுட்டிக்காட்டியே நாம் வருகின்ருேம்.''

திருவாளர்கள் நா. கதிர்காமு, நா. கதிரவேற்பிள்ளை, தெட்சணமூர்த்தி, ஆ. சந்திரசேகரம், செ. ஐயாத்துரை, சபா. சித்திரவேல் உட்பட பலர் உரையாற்றினர்.

# வாகனங்களில் கூடுதலாக பிரயாணிகளை ஏற்றலாம்

## பொலிஸ் சுப்பிரின்டன் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு
லொறிகளிலோ தனிப்பட்ட வான்களிலோ கார்களிலோ டாக்ஸிகளிலோ கூடுதலான மக்கள் பிரயாணம் செய்தால் அவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கவேண்டாம் என்று வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன் சகல பொலிசாருக்கும் நேற்று உத்தரவிட்டார்.

புகையிரதப்பகுதி வேலைநிறுத்தத்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் ஆஸ்பத்திரி நோயாளர்கள் தொழிலாளர்கள் இவ்வாறு தினமும் பிரயாணம்செய்வதாலேயே வேலைநிறுத்தம் முடியும் வரை இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டாமென உத்தரவிடப்பட்டது.

இந்த உத்தரவு மிகமுக்கியமாக யாழ்ப்பாணம் கொழும்பு பாதையிலுள்ள சாவகச்சேரி, கிளிநொச்சி, வவுனியா பொலிஸ் நிலையங்களுக்கே அறிவிக்கப்பட்டுள்ளது.

கூதெலான பிரயாணிகளுசெல்லும் எந்த வாகனத்தையும் தடைசெய்யக்கூடாதென ஆனையிறவு தடைமுகாம் பொலிஸாருக்கு விசேஷ உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. (கா. நி)

## சங்கானை பட்டினசபை தலைவர் ராஜினமா

யாழ்ப்பாணம், ஞாயிறு
சங்கானை பட்டினசபைத் தலைவர் திரு. சி. ஆறுமுகம் தமது பதவியிலிருந்து ராஜினமாச் செய்துள்ளார். புதிய தலைவர் தெரிவு இம்மாதம் 20-ம் திகதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தலைமையில் நடைபெறும். [கா நி)

... ...

## களவு

சுழிபுரம், சனி
வழக்கம்பரை அம்மன் கோவிலடியைச் சேர்ந்த திரு. எஸ். முத்துக்குமாரசாமிக் குருக்களுக்கு சொந்தமான ரூபா நூற்றியம்பது பெறுமதியான ஆட்டுக்கடா ஒன்று களவுபோய்விட்டதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

முறையினமாக நடந்து கொள்வதைத் தடுக்கத் தம்முடன் ஒத்துழைக்குமாறு தெரிவித்துள்ளார். [கா.நி]

## வேலணை மே…கு தமிழரசுக்கிளை

அல்லைப்பிட்டி, சனி
அகில இலங்கைத்தமிழரசுக்கட்சி வேலணை மேற்கு நாவலர் வாலிப முன்னணிக் கூட்டம் திரு. சி. கந்தவனம் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் அலுவலாளர்களாகத்தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: கா கதிர்காமு, துணைத்தலைவர்: வ தருமலிங்கம், செயலாளர்: ந சுந்தரலிங்கம், துணைச்செயலாளர்: க சதாசிவம், பொருளாளர்: சி கந்தவனம். ஆறு பேர் கொண்ட நிர்வாகக்குழுவும் தெரியப்பட்டது.

## பஜனைச் சபை மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஞாயிறு
வண்ணை வைத்தீஸ்வரன் பஜனைச்சபையின் பொதுக் கூட்டம் நடைபெற்றபோது மார்கழி முழுவதும் அதிகாலையில் பஜனை நடத்தப்படவேண்டுமென்றும் சமய அறிவுப்போட்டி ஒன்றை நடத்தி தைப்பொங்கல் தினத்தன்று தங்கப்பதக்கம் உட்பட பல பரிசில்களை வழங்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. அன்று வடமாநில பஜனைச் சபைகளைக் கெரவிப்பதுடன் பஜனைச்சபையின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு ஒரு மலர் வெளியிடப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது

## பெண் பொலிசார் தெரிவுக்கு நேர் முகப்பரீட்சை

கோட்டை, சனி
500 பெண்கள் பொலிசாராக விரும்பி விண்ணப்பித்துள்ளனர். ஆனல் பெண் பொலிசாருக்கு 15 காலிஸ்தானங்களே உள்ளன. இப்பதினைந்து பேர்களையும் தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை இப்பொழுது பொலிஸ் பயிற்சிக்கல்லூரியில் நடைபெறுகிறது.

முன்னர் 1400 பேர் இவ்வெற்றிடங்களுக்குவிண்ணப்பித்திருந்தனர். ஆனல் அவர்களில் 500 பேரே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# வீதிகளில் நடமாட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
புகையிரத சாரதிகளதும் பாதுகாவலர்களதும் வேலைநிறுத்தம் தொடர்ந்துநடைபெறுவது வடபகுதி பொலிஸாரையும் சிறைச்சாலை அதிகாரிகளையும் பெரிய பிரச்னைக்கு உட்படுத்தியுள்ளதாம்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து அண்மையில் விடுதலை செய்யப்பட்ட 15 க்கும் மேற்பட்ட கைதிகளும் தங்கள் ஊர்களுக்குச் செல்லாமல் யாழ்ப்பாண நகரிலேயே இரவும் பகலும் நடமாடுவதே பெரும் பிரச்னையாகும்.

விடுதலை பெய்யப்படும் கைதிகளுக்கு சிறைச்சாலைப் பகுதி புகையிரத வாரண் வழங்கப்பட்டு அவர்கள் சொந்த இடங்களுக்கு அனுப்பப்படுவதே வழக்கமாகும். ஆனல் புகையிரத பகுதி வேலைநிறுத்தத்தால் இப்போது வாரண்ட் வழங்கப்படுவதில்லை.

இவர்களுக்கு பஸ்கட்டணம் வழங்கப்பட்டு இவர்கள் விடுதலைசெய்யப்பட்டதாகவும் இவர்கள் அப்பணத்துக்கு மதுபானமும் அருந்தி மிகுதியைச் செலவுசெய்துவிட்டு தாங்கள் ஊர்களுக்குச்செல்லாமல் இங்கு திரிவதாகவும் சிறைச்சாலை சிரேஷ்ட ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

இவர்களில் இருவர் டயர் களவு ஒன்று சம்பந்தமாக நேற்று முன்தினம் கைதானதும் குறிப்பிடத்தக்கது. [கா. நி]

## வழக்கறிஞருக்கு நீதிமன்றத்தில் அனுதாபம்

மல்லாகம், சனி
நீதிபதிகள் மட்டுமன்றி வழக்கறிஞர்களும் பயமின்றியும் பாரபட்சமின்றியும் தமது கடமைகளை செய்தல் வேண்டும்'' என மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி காலஞ்சென்ற வழக்கறிஞர் பி. ரகுபதியின் அனுதாபக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

வழக்கறிஞர் சங்க சார்பில் திரு. எஸ். நடராசா அனுதாபத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசினர். தீர்மானம் அன்னரின் குடும்பத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## அழியும் செல்வம் எது? அழியாதது எது?

முசலி, சனி
''உலகத்தில் கடல்படு திரவியங்களையும், மலைபடு திரவியங்களையும், வேறு பலதிரவியங்களையும் மக்கள் பாடுபட்டுத்தேடி தமது சந்ததியினருக்கு சேமித்து வைத்துள்ளார்கள். ஆனல் இவையெல்லாம் அழிந்துவிடுவன. ஆனல் என்றும் எவராலும் அழிக்க முடியாதசெல்வம்ஒன்றுண்டு அதுதான் கல்விச்செல்வம். அச்செல்வத்தைப்பெற்றவர்களுகுசென்றவிடமெல்லாம் சிறப்பு உண்டு. எனவே இந்த கல்லூரி எமக்கு தரும் செல்வத்தை நாம் என்றும் மறக்கக்கூடாது.''

இவ்வாறு மன்னர் எம். பி. திரு. வ. ஏ. அழகக்கோன் புனித-சவேரியார் கல்லூரி பழைய மாணவர்சங்கத்தின் வருடாந்த விழாவின் போது பேசுகையில் கூறினர்.

மன்னர்- புனித- சவேரியார் கல்லூரி அதிபர் வண. சகோதரர். யோசவ். கிலாறி தலைமையில் விழா நடைபெற்றது.

பழைய மாணவர் வருடாந்த விழாவையொட்டி விளையாட்டுப்போட்டிகளும், இன்னிசைக்கச்சேரிகளும் இடம் பெற்றன.

## கசிப்பு வடிப்பு

முசலி, சனி
மன்னர் மாவட்டத்தைச் சேர்ந்த புளியடியிறக்கம் மடுறேட் கிராமசேவையாளர் பகுதியில் கசிப்பு வடிப்பவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துவருவதாக புகார் கூறப்படுகிறது.

மடுத்திருப்பதி யாத்திரைக்கு செல்பவர்களும் மடுறேட்டில் கசிப்பு வடிப்பவர்களின் தொல்லையால் அவதிக் குள்ளாகின்றனராம்

# சாவகச்சேரி கொலை: சந்தேகநபர் றிமாண்டில்

யாழ்ப்பாணம், சனி
சாவகச்சேரியைச் சேர்ந்த தம்பிராஜா என்பவரை அடித்துக் கொலை செய்தது சம்பந்தமாக சுப்பையா செல்லத்தம்பி என்பவரைப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்தனர்.

இம்மாதம் 7-ம் திகதி தாக்கப்பட்ட தம்பிராஜா, சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுமரணமானர்.

இம்மரணம் 'கொலை' என்று தீர்ப்பளிக்கப்பட்டதைத் தொடர்ந்து கைதான செல்லத்தம்பி இம்மாதம் 19-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். (கா. நி.)


வலி-மேற்கு
பல. நோ. கூ. ச. சமாஜத்தின்

**சிறப்பு விற்பனை நிலையம்**

சங்கானைச் சந்தைக்கு அருகாமையிலுள்ள புதிய கட்டிடம்
15-12-69 மாலை 3-30 மணிக்கு

**சிறப்பு விற்பனை நிலையத்தை**

உரக் கூட்டுத் தாபனத் தலைவர்
**திரு. மகிந்தா சில்வா**
திறந்துவைப்பார்.

★ கிறிஸ்மஸ், புது வருடப்பிறப்பு, தைப்பொங்கல் பண்டிகைகளை முன்னிட்டு சேலைகள், ரவிக்கைத் துணிகள், பட்டு வேட்டி சால்வைகள், காற்சட்டைத் துணிகள் முதலியவற்றின் விலைகள் மலிவாகக் கணிக்கப்பட்டுள்ளது.

★ ''வலிகோப்ரெக்ஸ்'' முத்திரை பொறித்த துணிகளை வாங்கி கூட்டுறவு உற்பத்தியை ஆதரியுங்கள்.

★ தரத்திற்கும், நீண்டகால பாவனைக்கும் உறுதியும், உத்தரவாதமும் உடையவை.

பாவனையாளர்கள் முதல் சந்தர்ப்பத்தைத் தவறவிடாது பயன்படுத்தும்படி தயவாகக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்



சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு

ONE-DOLLAR

டொலர் அலுமினியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

மின்சார உலை (Electric Boiler) 3 கலன்கொள்ளக் கூடியதும் சிற்றுண்டிச்சாலைகள், பள்ளிக்கூடங்கள், வைத்திய நிலையங்களில் பாவிக்கக்கூடியது மானது. 36 கடற்கரை வீதி, யாழ்ப்பாணம். 1708

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

ஞாயிறு 14—12—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, துதிப்பாடல்கள், 7-15 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம், 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 கிராமியப் பாடல்கள், 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 நிலையஒலிப்பதிவு, 7-35 மத்தாப்பு, 8-00 செய்திச் சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 10-15 நேயர்கேட்டவை, 10-30 செய்திச் சுருக்கம்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

### விற்பனைக்கு

கந்தர்மடம் குமாரசாமி வீதியில் உள்ள காணி விற்பனைக்குண்டு. ஆ. சின்னத்தம்பி, 2, குமாரசாமி வீதி, யாழ்ப்பாணம். இம்முகவரியுடன் தொடர்பு கொள்க. 1711

### WANTED

Wanted trainees as Lathman and Mechanics age 18-25 qualifications minimum J. S. C. with Physics Mathematics Security 500-/ closing 27-12-69. Advt No. 1709, C/o Eelanadu, Jaffna 1709

Wanted Lady Cashier qualifications minimum J. S. C. typeing necessary. Security 1000/- Salary according to ability. Age 18-45. Closing 27-12-69. Advt No. 1710, C/o Eelanadu, Jaffna 1710

Wanted two Bar-keepers with security to run two Theatre Bars. Apply with testimonials & previous experience to Amalgamated Theatres Ltd, Windsor Theatre, Jaffna 1712

## தேர்தல் பிரசாரம்

பச்சிலைப்பள்ளி, சனி

எதிர்வரும் ஆட்சிமன்றப் பொதுத் தேர்தலில் கிளிநொச்சித் தொகுதியில் போட்டியிடவிருக்கும் இரண்டு பெரும் தமிழ் அரசியல் கட்சியைச் சேர்ந்த அபேட்சகர்கள் பச்சிலைப்பள்ளிப் பகுதியைச் சேர்ந்த பளை, கிளாலி, முள்ளியான், கட்டைக்காடு, போக்கறப்புப் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று தேர்தல் பிரசாரம் செய்வதோடு கூட்டங்களையும் நடாத்துகின்றனர்.

## மாட்டு நோய்

நெடுந்தீவு, சனி

நெடுந்தீவில் தற்போது மாட்டு நோய் பரவலாக தொற்றிவருகிறதாம். கழிச்சல் நோய், முன்னடைப்பான் போன்ற நோய்களால் பீடிக்கப்பட்டு அதிகமாகப் புல்வெளிகளில் உள்ள மாடுகளே பாதிக்கப்பட்டு வருகின்றன.

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]
ஜெமினி - சரோஜாதேவி
எஸ்.எஸ் ஆர்.-ராஜசுலோஜனு நடித்த
குலவிளக்கு

### ஓடர் நைசை

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

யாழ்ப்பாணம்நாவலர்றேட் காலஞ்சென்றசுல்த்தான் முகியிதீன் அப்துல் கரீம். காலஞ்சென்றவர்.

தத்துவ வழக்கு:- இல. 2449

யாழ்ப்பாணம் நாவலர்றேட் அப்துல் கரீம் நிஜாம். பெட்டிசகாரர்.

எதிராக.

பராயமாகாதவர். 1. அப்துல் கரீம் ஜலீலா.
,, 2. அப்துல் கரீம் பதுறுநிசா.
,, 3. அப்துல் கரீம் சைபுன்னிசா
,, 4. அப்துல் கரீம் நிலாம்.
,, 5. அப்துல் கரீம் பஸ்மைலா,
,, 6. அப்துல் கரீம் முசம்மிலா.
7. முகம்மதுஅப்துல் காதர்அப்துல் மஜீது.

எல்லோரும் யாழ்ப்பாணம் நாவலர் றேட்டைச் சேர்ந்தோர். 1 முதல் 6வதுவரையுள்ள பராயமாகாத எதிராளிகள் 7வது எதிராளியான நியமிக்கப்படவுள்ள கார்டியன் மூலம். எதிராளிகள்.

1969ம் ஆண்டு புரட்டாதிமாதம் 20-ம் திகதி பெட்டிசகாரனின் தரணியாகிய திரு எஸ். மகாதேவா முன்னிலையில் பெட்டிசகாரனுடைய 18-5-69ம், 25-5-69ம் திகதிகளில் அணைக்கப்பட்ட சத்தியக் கடுதாசிகள் வாசிக்கப்பட்டு சொல்லப்பட்ட பெட்டிசகாரனுடைய பெட்டிசத்தில் உள்ளவை யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி கனம் ஐ. எம். இஸ்மாயில் முன்னிலையில் தீர்ப்புக்குவந்தபோது.

முதலாவதில் இருந்து ஆறுவது வரையும் உள்ள பராயமாகாத எதிராளியாயுள்ளவர்களுக்கு ஏழாவது எதிராளி கார்டியன்-அட்-லைரம் ஆக இத்தால் நியமிக்கப்பட்டும் 1969-ம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ம் திகதிக்குள் மேற்சொல்லப்பட்ட காலஞ்சென்றவரில் அக்கறையுள்ள எதிராளிகளோ அல்லது எவரோ எவர்களோ இந்தக்கோட்டில் சமுகமளித்து மேற்சொல்லப்பட்ட தீர்வைக்கும் சொல்லப்பட்ட காலஞ்சென்றவரின் உரிமைக்காரனாகிய பெட்டிசகாரனுக்கு ஏன் தத்துவங் கொடுக்கப்படாதென்பதற்குத் தங்களுடைய மறுப்பைத் தெரிவிக்காவிட்டால் பெட்டிசகாரனுக்குத் தத்துவம் கொடுபடும்என்று இத்தால்தீர்வைப்படுத்தப்பட்டுள்ளது.

வரையப்பட்டது: 1969, புரட்டாதி 20-ம் திகதி
ஒப்பம்: எஸ். மகாதேவா ஒப்பம் ஐ. எம் இஸ்மாயில்
பெட்டிசகாரனின் தரணி. மாவட்ட நீதிபதி.

11-11-69 காரணம் காட்ட 26-1-70க்குத் திகதி விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்: ஐ. எம் இஸ்மாயில்
மாவட்ட நீதிபதி

1878

### ஓடர் நைசை

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

யாழ்ப்பாணம் நாவலர்றேட் காலஞ்சென்ற சுல்த்தான் முகியிதீன் அப்துல்கரீம் கைம்பெண் ஜமீலாவின் மரணசாதனத்தின்பேரால். காலஞ்சென்றவர்

தத்துவவழக்கு: இல. 2448

யாழ்ப்பாணம் நாவலர்றேட் அப்துல் கரீம் நிஜாம். பெட்டிசகாரர்.

எதிராக

பராயமாகாதவர்: 1. அப்துல் கரீம் ஜலீலா
,, 2. அப்துல் கரீம் பதுறுநிசா
,, 3. அப்துல் கரீம் சைபுன்னிசா
,, 4. அப்துல் கரீம் நிலாம்
,, 5. அப்துல் கரீம் பஸ்மைலா
,, 6. அப்துல் கரீம் முசம்மிலா
7. முகம்மதுஅப்துல் காதர் அப்துல் மஜீது

எல்லோரும் யாழ்ப்பாணம் நாவலர் றேட்டைச் சேர்ந்தோர். 1 முதல் 6 வது வரையுள்ள பராயமாகாத எதிராளிகள் 7-வது எதிராளியான நியமிக்கப்படவுள்ள கார்டியன் மூலம்

எதிராளிகள்.

1969-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 20-ம் திகதி பெட்டிசகாரனின் தரணியாகிய திரு. எஸ். மகாதேவா முன்னிலையில் பெட்டிசகாரனுடைய 18-5-69, 25-5-69-ம் திகதிகளில் அணைக்கப்பட்ட சத்தியக்கடுதாசிகள் வாசிக்கப்பட்டுச் சொல்லப்பட்ட பெட்டிசகாரனுடைய பெட்டிசத்தில் உள்ளவை யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி கனம் ஐ. எம். இஸ்மாயில் அவர்கள் முன் தீர்ப்புக்கு வந்த போது,

முதலாவதில் இருந்து ஆறுவது வரையுள்ள பராயமாகாத எதிராளிகளாயுள்ளவர்களுக்கு ஏழாவது எதிராளி சார்டியனாக நியமிக்கப்பட்டும், பிரசித்த நொத்தாரிஸ் திரு. எஸ். மகாதேவா முகதாவில் 437-ம் இலக்கத்தில் முடிந்த மரணசாதனத்தில் எக்ஸிகியூட்டராக நியமிக்கப்பட்ட பெட்டிசகாரனுக்கு 1969-ம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ம் திகதி காலஞ்சென்றவரில் அக்கறையுள்ள எதிராளிகளோ அல்லது வேறு எவரோ எவர்களோ கோட்டில் பிரசன்னமாகி புறேபேட் ஏன் கொடுக்கப்படாது என்பதற்குப் போதிய காரணம் காட்டாதபட்சத்தில் ''புறேபேட்'' கொடுபடும் என்பதாக இத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வரையப்பட்டது 1969 புரட்டாதி 20-ம் திகதி
ஒப்பம்: எஸ். மகாதேவா, ஒப்பம்: ஐ. எம். இஸ்மாயில்
பெட்டிசகாரனின் தரணி மாவட்ட நீதிபதி

11-11-69

காரணம் காட்டும் திகதி 26-1-70-க்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. ஒப்பம்: ஐ. எம். இஸ்மாயில்
மாவட்ட நீதிபதி

1879

## நயினாதீவில் சிங்கள ஆசிரியர் நியமனத்திற்கு ஆட்சேபம்

### பெற்றோர்-ஆசிரியசங்கங்கள் தீர்மானம்

நயினாதீவு, சனி

நயினாதீவு மகாவித்தியாலயத்திலும் இரு கனிஷ்ட மகா வித்தியாலயங்களிலும் சிங்கள ஆசிரியர்களை நியமிப்பதை மேற்படி பாடசாலைகளின் பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் நிராகரித்துள்ளன,

நயினாதீவு கிராம சபை தீர்மானம் ஒன்றின் மூலம் வடபகுதி கல்வி அதிபரிடம் சிங்கள ஆசிரியர்களை நயினாதீவுப் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டிருந்தது. கல்வி அதிபதி இதுபற்றி 3 பாடசாலைகளின் பெற்றோர் ஆசிரிய சங்கங்களின் கருத்தை அவசர கடிதமூலம் கேட்டிருந்தார் இதுபற்றி ஆராய்வதற்காக நேற்று முன்தினம் கூடிய பெற்றோர் ஆசிரிய சங்கங்கள் சிங்கள ஆசிரியர் நியமனத்தை பெற்றோர் விரும்பவில்லை. என்ற தீர்மானத்தை நிறைவேற்றி வித்தியாதிபதிக்கு அனுப்பிவைத்தன.

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
கிருஷ்ண - கே. ஆர். விஜயா
வாணிஸ்ரீ

## வழமை போல் படகு சேவை

நெடுந்தீவு, சனி

கடந்த இரு தினங்கள் நெடுந்தீவு ... குறிகட்டுவான் ... வழமை போல் ... து சேவை துண்டிக்கப் ...

## இரு மோட்டார்விபத்துக்கள்: சிறுமி நிலை கவலைக்கிடம்

மட்டுவில், வெள்ளி

நேற்று இரு மோட்டார் விபத்துகள் இங்கு இடம் பெற்றுள்ளன. ஒன்றில் எட்டு வயதுப் பெண் குழந்தையொன்று புத்தூரில் காரினால் மோதப்பட்டது. அடுத்தது கைதடியில் ஒருவர் லொறியினால் மோதப்பட்டார்.

புத்தூரில் காரினால் மோதப்பட்டு இரத்த வெள்ளத்தில் புரண்ட 8 வயதுச் சிறுமி உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டார். இவரது நிலை கவலைக்கிடமாயிருப்ப... தெரிகிறது. கோப்பாய் பொலிஸார் ஸ்தலத்துக்கு விரைந்து விசாரணை நடத்தினர்.

நேற்று இரவு சுமார் 9 மணியளவில் கைதடிச் சந்திக்கு அருகாமையில் எஸ். சபாபதி என்பவர் உடனடியாகச் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

இது சம்பந்தமாக சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர்.

## 'போராடக்கூடிய கட்சி'

மல்லாவி, சனி

தமிழினத்தின் உரிமையைப் பெறப் போராடக்கூடிய கட்சிதான் எமது கட்சி என்பதை மறக்கக் கூடாது என்று யோகபுரம் பகுதியில் நடந்த தமிழரசுக் கட்சிக் கூட்டத்தில் திரு. எம். ஆலாலசுந்தரம் பேசும் போது கூறினார்.

அரைச்சலார்
1-1-70 முதல் 15-1-70 வரை
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்.

## 'சில தினங்களில் வெற்றி நிச்சயம்'

— உதவி மேயர்

யாழ்ப்பாணம், சனி

''ஆயிரம் சுருட்டுக்கு 15 ரூபா கூலி தரவேண்டுமென சுருட்டுத் தொழிலாளர் நடத்திவரும் போராட்டம் ஏற்கனவே வெற்றியடைந்திருப்பதை இங்கு உங்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.''

இவ்வாறு அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர்களால் கோண்டாவில் கிழக்குச் சந்தியில் கூட்டப்பட்ட மாபெரும் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் சங்கத்தின் தலைவரும், யாழ்ப்பாண மாநகரத் துணை முதல்வருமான திரு. ஆ. துரைராஜசிங்கம் குறிப்பிட்டார்.

திரு. துரைராஜசிங்கம் தொடர்ந்து பேசுகையில், ''சொற்ப முதலாளிமார்களே இன்னும் எமது கோரிக்கைக்குப் பிறரது தூண்டுதல் காரணமாகப் பணியப் பின்னிற்கிறார்கள். இன்னும் சில தினங்களில் பூரண வெற்றியைச் சுருட்டுத் தொழிலாளர் ஈட்டுவது நிச்சயமென அறுதியிட்டு உறுதிதெரிவித்துள்ளார். நாம் அடைந்த வெற்றி தொழிலாளரது ஒற்றுமையால் மட்டுமே கைகூடியது. எனவே சுருட்டுத் தொழிலாளரது இழந்த ல உரிமைகளை மீட்டுப் பெறச் சங்கம் எடுக்கும் ஏனைய நேரடி நடவடிக்கைகளில் தொழிலாளர் ஏகோபித்து குதிக்கவும் போராட்டத்தில் இறங்கவும் சித்தமாகவும், தயாராகவும் இருத்தல் வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். சுருட்டுத் தொழிலாளர் வரலாற்றிலே நாம் இப்பொழுது மகத்தான வெற்றியை அடைந்திருக்கிறோம். மேலும் பல நன்மைகளைப் பெறுவதற்குத் தொழிலாளர் ஐக்கியத்தைக் கட்டிக் காத்து, கண்ணியம், கட்டுப்பாடு, கடமை பேணத் தொழிலாளர் முன்னிற்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

திருவாளர்கள் அ. விசுவநாதன், ஏ. என். ராஜன், கே. ஐ. நாகராஜன், எஸ். செல்வராசன் ஆகியோருட்படப் பலர் உரை நிகழ்த்தினர்.

## வேலணைச்செய்திகள்

### புகார்

வேலணை, புதன்

வேலணை கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கம் பல ஆண்டுகளாக இயங்கிவரவில்லைஎன இப்பகுதி மக்கள் கிராமஅபிவிருத்தி உத்தியோகஸ்தரிடம் புகார் தெரிவித்துள்ளார். இது பற்றி அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றைச் சமர்ப்பிப்பதற்கும் முயற்சிகள் நடைபெறுகின்றனவாம்:

0 0 0

### பிரியாவிடை

வேலணை கிராமச்சபையில் லிகிதராக 4 ஆண்டுகள் கடமையாற்றிய திரு. கே. சிவசுப்பிரமணியம் ஜனவரிமுதல் திகதியிலிருந்து மாற்றலாகிச் செல்வதையொட்டி கிராம சபையினர் ஒரு பிரியவிடை விருந்துபசாரம் அளிக்கத் தீர்மானித்துள்ளனர்.

0 0 0

### கட்டாக்காலிகளை பிடிக்கஅனுமதி

கட்டாக்காலி கால் நடை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[தினசரி 3 காட்சிகள்] நடித்த

# குலவிளக்கு

இங்ஸ்லி [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை]

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
ஏ. பி. நாகராஜனின் தயாரிப்பில் உருவான
மற்றுமோர் வெற்றிச்சித்திரம்



★ சிவாஜி ★ பத்மினி
★ ஜெமினி ★ சாவித்திரி
★ முத்துராமன் ★ கே ஆர். விஜயா
★ நாகேஷ் ★ மனோரமா
நடித்த

# திருவருட்செல்வர்

[ஈஸ்ட்மென் கலர்]

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
★ ஜெமினி கணேசன் ★ ரங்கராவ்
சௌகார் ஜானகி, வாணிஸ்ரீ, ரோஜாரமணி, ஷகிலா
நடித்த

# குழந்தை உள்ளம்

டைரக்ஷன்: சாவித்திரி கணேசன்

படி கேட்டிருந்தது, கல்வி அதிபதி இதுபற்றி 3 பாட

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
கிருஷ்ண - கே. ஆர். விஜயா வாணிஸ்ரீ
நடித்த
மாஸ்டர் மதருஸ்

வல்வெட்டித்துறை
றஞ்சனா தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
நாடோடி

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி - பத்மினி
நடித்த
கல்யாணம்பண்ணியும் பிரம்மச்சாரி

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
ரவிச்சந்தரன் - கே ஆர் விஜயா
நடித்த
நினைவில் நின்றவள்

REGAL JAFFNA
Daily 10-30 a.m, 2-00
4-45, 7, & 9-45 p.m
Sean Connery,
Karin D'Or
in
YOU ONLY LIVE TWICE

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 &
9-45, p. m.
Janet Leigh
Edward G. Robinson
in
OPERATION GRANDSLAM
(Scope-color)

## படகு சேவை

நெடுந்தீவு, சனி

கடந்த இரு தினங்கள் நெடுந்தீவு - குறிக்கட்டுவான் தபால் போக்குவரத்து சேவை துண்டிக்கப் பட்டிருந்தது. சிறு வள்ளங்கள் இரண்டு அதிக கட்டணத்தை வசூலித்து பிரயாணிகளை ஏற்றிச் சென்றன. கடும் புயல் வீசலாம் என அறிவிக்கப்பட்டிருந்ததரல் அரசாங்க மோட்டார் வள்ளம் சில்வ ஸ்பிறேதன் சேவையை நிறுத்திக்கொண்டது.

ஊர்காவற்றுறை, எழுவைதீவு, அனலைதீவு, நயினைதீவு படகுசேவை வழமைபோல் நடைபெற்றது.

## விவசாயப் பரிசு

மண்டைதீவு, சனி

தீவுப்பகுதியில் இவ்வாண்டுக்கான விவசாய எழுத்துப் போட்டியில் புங்குடுதீவைச் சேர்ந்த திரு. த. சௌவுந்தரநாயகத்துக்கு முதலாவது பரிசு கிடைத்துள்ளது. அண்மையில் நாரந்தனை கத்தோலிக்க ஆண் பாடசாலையில் விவசாயப் பகுதியினர் நடாத்திய தீவுப்பகுதிக்கான விவசாய எழுத்துப் போட்டியில் இப்பரிசு கிடைத்தது.

இவ்வருடத்துக்கான பரிசுகளும் பத்திரங்களும் இம்மாதம் 15-ந் திகதி ஐக்கிய மேற்பார்வைச்சபை வீரசிங்கம் மண்டபத்தில் வழங்கப் படவிருக்கின்றன.

## எதிரி விடுதலை

மல்லாகம், சனி

அளவெட்டி தெற்கு வாசியான திருச்சிற்றம்பலம் என்பவரின் மாட்டைக் களவாடியதாக சுன்னாகம் பொலிசாரால் தொடரப் பட்டிருந்த வழக்கில் எதிரியான எஸ். நவரத்தினம் என்பவரை விடுதலை செய்து நீதிபதி தீர்ப்பு வழங்கினர்.

வழக்கு விசாரணையில் சிற்றம்பலம், அன்னம், பொலிஸ் கான்ஸ்டபிள் ஆர். ஏ. லயனல் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

## பரீட்சார்த்திகள் அவதி

நெடுந்தீவு, சனி

நெடுந்தீவில் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு நேற்று வரை பிரவேசப்பத்திரங்கள் கிடைக்காததினல் மாணவர்கள் பெரும் அவதிப்பட்டனர். பிரவேசப்பத்திரங்கள் கிடைக்காத பல மாணவர்கள் தந்தி மூலம் பரீட்சை இலாகாவுடன் தொடர்புகொண்டனர்.

தெரிகிறது. கோப்பாய் பொலிஸார் ஸ்தலத்துக்கு விரைந்து விசாரணை நடத்தினர்.

நேற்று இரவு சுமார் 9 மணியளவில் [illegible] சந்திக்கு அருகா[illegible]யில் லொறியினல் மோதப்பட்ட

## கி. ச. தலைவர் தெரிவு

மல்லாகம் சனி

மயிலிட்டி கிராமசபைக்கு புதிய தலைவர் தெரிவுக்கான கூட்டம் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. ஏ. ஏ. ஜோசேப் தலைமையில் இம்மாதம் 20ம் திகதி காலை 10 மணிக்கு கிராமசபை அலுவலகத்தில் நடைபெறவிருக்கின்றது.

கூடிய கட்சிதான் எமது கட்சி என்பதை மறக்கக் கூடாது என்று யோகபுரம் பகுதியில் நடந்த தமிழரசுக் கட்சிக் கூட்டத்தில் திரு. எம். ஆலாலசுந்தரம் பேசும் போது கூறினர்.

திரு. ஏ. அம்பலவாணர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. ஆலாலசுந்தரம் மேலும் கூறியதாவது: தமிழினத்தின் உரிமையைப் பெற கடந்த காலத்தில் தாம் நடத்திய போராட்டங்களுக்கு ஆதரவு தந்தது போல வருங் காலத்திலும் ஆதரவு தருவீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அதன் நிமித்தமே நான் இத் தொகுதியில் போட்டியிட முன்வந்தேன்.

# இன்றைய பலன்

### சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

கார்த்திகை மாதம் 29-ம் திகதி (14-12-69)

**மேஷம்-** எதிர்பாராத விளைவுகளால் வேதனைப்படுவீர்கள். சிறிய விடயத்துக்குகூட குறைகேட்க நேரிடும். தூர இடத்திலிருந்து செய்தியொன்று கிடைக்கலாம் பெரியோரைக் கனம்பண்ணுவது சிறப்பாகும்.

**ரிஷபம்-** வாழ்வில் இன்று வெற்றித் திருநாளாகும். எதிலும் அதிர்ஷ்டம் உங்கள் பக்கமே இருக்கும். புதிய பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு நன்று. வெளியிடத் தொடர்புகளும் சிறப்பைத் தரும்.

**மிதுனம்-** காரியங்கள் அனைத்திலும் கை கொடுப்பதற்கு வீட்டிலுள்ள அனைவரும் முன்வருவார்கள். இதயத்தில் இன்பத்தின் ரேகைகள் படரும். தெய்வ வழிபாட்டில் அதிக நாட்டம் செலுத்துவீர்கள்.

**கடகம்-** எதிலும் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவும். உங்கள் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு திரைமறைவில் சதிகள் நடைபெறக்கூடும். கொடுக்கல் வாங்கல்மூலம் பிணக்குகள் தோன்றும்.

**சிம்மம்-** எதிர்பார்த்த இன்பம் இன்று உங்களை அணைத்துக்கொள்ளும், ஆரம்பத்தில் முட்டுக்கட்டை போட்டவர்கள் இன்று ஆதரவு கொடுப்பார்கள். காதல் ஜோடிகளுக்கு பொன்னான தினம்,

**கன்னி-** செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாக இருக்கும். நண்பர்களின் தொல்லைகளால் நஷ்டமடைவீர்கள். தொழில்புரியும் இடத்தில் புதிய எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டிய நிலைமை ஏற்படலாம்.

**துலாம்-** பொதுப்பணி உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். சிலர் வாழ்க்கையில் அரசியல் பிரவேசத்துக்கும் நாள் நிச்சயிக்கப்படலாம். தந்தைவழி மூலம் ஆதரவும் பெருகும் செல்வாக்கும் வளர்ச்சியடையும்.

**விருச்சிகம்-** கடமையாற்றுமிடத்தில் மற்றவர்களின் மதிப்பைப் பெறுவீர்கள் சிலருக்கு வெளிநாடு செல்லும் சந்தர்ப்பமும் கிடைக்கலாம். கூட்டு வியாபாரம் சிறந்த பலனைத் தரமுடியும்.

**தனுசு-** பண விவகாரத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படுகின்றது. புத்திரர்களாலும் புகழுக்குமிடமுண்டு. வீட்டில் சுபகாரியமொன்று இடம்பெறலாம். மற்றவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்பார்கள்.

**மகரம்-** ஆடம்பரமான செலவுகளை இன்று தவிர்த்துக்கொள்ளவும். பூமிப்பிணக்கு இன்று பொல்லாங்கைத் தேடித்தரலாம். உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும். எதிலும் அடக்கம் வேண்டும்

**கும்பம்-** வாழ்க்கை மேடுபள்ளம் நிறைந்ததாக இருக்கும் கடன் வாங்கவும் நேரிடலாம். உடல்நலத்தைப் பேணிக்கொள்ளவும். அபாயகரமான காரியங்களை தவிர்ப்பது விரும்பத்தக்கது.

**மீனம்-** மனம் நிறைந்த வாழ்வு இன்று கிடைக்கும். இனபந்துக்களின் கொண்டாட்டங்களுக்கும் இடமுண்டு. விவசாயிகளுக்கு திருப்திகரமான முன்னேற்றமுண்டு: வரவேற்கவேண்டிய தினம்.

பற்றி அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றைச் சமர்ப்பிப்பதற்கும் முயற்சிகள் நடைபெறுகின்றனவாம்:

0 0 0

### ஒத்திவைப்பு

வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மன் ஆலய தர்மகர்த்தா சபையைச் சேர்ந்த 17 பேர் மேற்படி சபையிலுள்ள 7 பேர் கோயில் நிர்வாகத்தில் முறைகேடாக நடந்து கொண்டதாக தாக்கல் செய்திருந்த வழக்கு யாழ் மாவட்டநீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுபெப்ரவரிமாதம் 7-ம் திகதிக்கு பின்போடப் பட்டுள்ளது.

0 0 0

### பஸ் வசதி

வேலணை கிழக்குப் பகுதியில் இருந்து பல மைல் தூரம் 'வேலணை மத்திய மகாவித்தியாலயத்திற்கு மாணவர்கள்நடந்து செல்ல வேண்டியிருப்பதால் வேலணை வெட்டுக்குளச் சந்தியிலிருந்து மேற்படி பாடசாலைக்கு காலையிலும் மாலையிலும் பாடசாலை பஸ் சேவை ஒன்றை நடாத்தும் படி இப்பகுதி மக்கள் தீவுப் பகுதி எம். திரு. வ. நவரத்தினத்திடமும் வடபிராந்திய இ. போ. ச மனேஜருடனும் தொடர்புகொண்டுள்ளார்கள்,

0 0 0

### புதிய தலைவர்

வேலணை, சனி

வேலணை கிழக்கு பயிர்ச் செய்கைக் குழுத் தலைவர் திரு. வ. கதிரவேலு பதவியை ராஜினமாச் செய்ததையடுத்து புதிய தலைவர் தெரிவு நடைபெற்றது.

புதிய தலைவராக வேலணை கி. ச. தலைவர் திரு. க. சதாசிவம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்:

0 0 0

### கோரிக்கை

வேலணை செட்டிபுலம் பகுதியில் ஒரு தையல் பாடசாலை நிறுவ வேண்டுமென அப்பகுதி மக்கள் தீவுப் பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. நவரத்தினத்தையும் தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. விநாயகலிங்மத்தையும் கேட்டுள்ளனர்.

0 0 0

### இறுதிப் போட்டி

தீவுப்பகுதி விளையாட்டுக் கழகத்தினல் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளில் கிளித்தட்டுப்போட்டி இறுதிப்போட்டியாக இம்மாதம் 27-ந் திகதி நடைபெறும். வேலணைக் கிராமசபைத் தலைவர் திரு. க. சதாசிவம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

தீர்மானித்துள்ளனர்.

0 0 0

### கட்டாக்காலிகளை பிடிக்கஅனுமதி

கட்டாக்காலி கால் நடைகளின் தொல்லையைப்போக்கும் பொருட்டு பகிரங்கமாகக்காணப்படும் கால்நடைகளைப்பிடிக்கும் படி வேலணை கிழக்கு பயிர்ச்செய்கைக்குழு அறிவித்துள்ளது.

வேளாண்மை பாதிக்கக் கூடியவகையில் கால் நடைகள் வயல்களுக்குள் நுழையக் கூடிய வேலிகளையும் சங்கப் பொறுப்பில் திருத்திக்கொடுப்பதெனவும் பயிர்ச்செய்கைக்குழு தீர்மானித்துள்ளது

0 0 0

### 1378 பரீட்சார்த்திகள்

இன்று ஆரம்பமாகும் க. பொ. த. சாதாரண பரீட்சைக்கு வேலணை மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் 1378க்கு அதிகமான மாணவர்கள் தோற்றுகின்றனர். அதிக மானேர் இதில் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாவர்.

## 3-ம், 4-ம் வகுப்பு பரீட்சைமுடிவு

உரும்பராய், சனி

வலிகாமம் கிழக்குத் தமிழாசிரியர் சங்கத்தினல் சென்ற 30-11-69-ல் நடாத்தப்பட்ட மூன்றும் நான்காம் வகுப்புப் பரீட்சைகளுக்கான பெறுபேறுகள் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ஆயிரத்து அறுநூறுக்கு மேற்பட்ட மாணவர்கள் தோற்றிய இப்பரீட்சையில் எண்பது சதவிகிதமான மாணவர்கள் தேர்ச்சிபெற்றுள்ளனராம்.

காலி மேயர் மீது

## பயமுறுத்தியதாக குற்றச்சாட்டு

காலி, சனி

உள்நாட்டமைச்சர் டாக்டர் தகநாயக்காவையும் காலி நகரசபையின் கட்டுக்கொடை அங்கத்தவரான ஜனப். ஏச். எம். அன்வரையும் காலி மேயர் திரு. டபிள்யு. டி. எஸ். அபேகுணவர்த்தன கடந்த புதன்கிழமையன்று பயமுறுத்தியதாகக்குற்றம் சாட்டி காலி பொலிசார் அவர்மேல் வழக்கொன்றைத்தாக்கல் செய்துள்ளனர்.

காலி பதில் நீதிபதி திரு. நோபல் விக்ரமசிங்கி மேற்படி குற்றச்சாட்டையேற்றுள்ளதோடு டிசம்பர் 21-ம் திகதி வருமாறு திரு. அபேகுணவர்த்தனவுக்கு 'சமன்ஸ்' அனுப்பியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு விளைவுகளை சமாளிக்க ஆக்கபூர்வமான அவசர நடவடிக்கை

## ரஷ்யா, ஐக்கிய அரபுக்குடியரசு உறுதி

### அரசியல் தீர்வுகாணவும் தொடர்ந்து முயற்சி

மாஸ்கோ, டிச. 13

இஸ்ரேலிய ஆக்கிரமிப்பின விளைவுகளை அகற்றுவதற்கு உடனடியாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஐக்கிய அரபுக்குடியரசும் சோவியத் யூனியனும் தெரிவித்துள்ளன. மேற்காசியா சம்பந்தமாக ஐ. நா பாதுகாப்புச்சபையின் தீர்மானத்தைச் செயற்படுத்தி அதன் மூலம் மேற்காசியப் பிரச்னைக்குத் தீர்வு காண முடியுமென்றும் இரு நாடுகளும் நம்பிக்கை தெரிவித்தன.

ஐக்கிய அரபுக்குடியரசின் உயர் அதிகாரிகள் மாஸ்கோவுக்கு மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு சோவியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். இப்பேச்சுவார்த்தைகளின் இறுதியில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானப்படி சென்ற யுத்தத்தின் போது இஸ்ரேலியர்கள் கைப்பற்றிய அரபுப் பகுதிகளிலிருந்து இஸ்ரேலியர்கள் வெளியேறினால்தான் மேற்காசியப் பிரச்னைக்கு அரசியல் தீர்வுகாண வழி பிறக்குமென்றும் சோவியத் யூனியன் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

அரபுநாடுகளின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று அவைகளுக்கு உதவியளிக்க சோவியத்யூனியன் முன்வந்துள்ள அதேசமயம் மேற்காசியப் பிரச்னைக்கு அரசியல் தீர்வுகாண சோவியத் யூனியன் தொடர்ந்து முயற்சி செய்துவருமென்றும் கூட்டறிக்கையில் தெரிவிககப்பட்டுள்ளது.

**யுதாண்ட்—ஈபான் சந்திப்பு**

இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் திரு. எபான் ஈபான் ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்டை ஐ. நா.வில் சந்தித்துப்பேசினார். மேற்காசியா சம்பந்தமான ஐ. நா. பாதுகாப்புச்சபைத் தீர்மானம் பற்றியும் மேற்காசியா பற்றிய நான்கு வல்லரசுகளின் பேச்சுவார்த்தை பற்றியும் இருவரும் பேசியதாகத் தெரிகிறது.

**ஜோர்டான் இஸ்ரேல் மோதல்**

ஜோர்டான் கால்வாய்ப் பகுதியில் ஜோர்டான் துருப்புகளுக்கும் இஸ்ரேல் துருப்புகளுக்குமிடையில் நேற்று மோதல் ஏற்பட்டதாகவும் இருதரப்பினருக்கும் அதிக சேதம் இல்லையென்றும் ஒரு செய்தி கூறுகிறது.

**இஸ்ரேல் பிரதமர் கருத்து**

மேற்காசியாவில் உண்மையான அமைதி நிலவுவதற்குச் செய்யப்படும் எந்த முயற்சிகளையும் இஸ்ரேல் வரவேற்குமென்று இஸ்ரேல் பிரதமர் திருமதி கொல்டா மெயர் டெல் அவிவில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார். அரபுமக்களை யுத்தத்திற்கு ஊக்கமளித்தவர்கள் அரபுத் தலைவர்களே என்றும் மேற்காசியாவில் அமைதிக்கு வழிகோலும்படி அரபுத் தலைவர்களை அரபுமக்களே நிர்ப்பந்தப்படுத்த வேண்டுமென்று பிரதமர் கொல்டா மெயர் கூறினார்.

## 'மந்திரி பதவியிலிருந்தால் வறுமையை அறியமுடியாது'

புதுடில்லி, டிச. 13

'மந்திரிகள் சிறிது காலத்துக்குப் பதவியிலிருந்து விலகி நாட்டு மக்களுடன் நேரடித் தொடர்புகொண்டு மக்களின் உண்மையான நிலையைத் தெரிந்து கொள்ள வேண்டும்'' என்று [இந்திரா] காங்கிரஸின் இடைக்காலத் தலைவர் திரு. ஸி சுப்பிரமணியம் புதுடில்லியில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பொன்றில்பேசுகையில் தெரிவித்தார்.

மந்திரி பதவியிலிருக்கும் போது வறுமையின் உண்மையான தோற்றத்தைப் பார்க்கும் வாய்ப்புஏற்படுவதில்லையென்றும் திரு. சுப்பிரமணியம் சொன்னார்.

இந்த வைபவத்தில்கலந்துகொண்ட பிரதமர் திருமதி இந்திராகாந்தி பேசுகையில், அரசியல் கட்சிகளும், அரசியல் தலைவர்களும் ஆட்சிமன்றம், சட்ட சபை அங்கத்தவர்களும் தங்களது கடமையும் பொறுப்பும் மக்கள்சேவை என்பதை மறந்துவிடக்கூடாது என்று கூறினார்.

**சுருட்டுத்தொழிலாளருக்கு**

## கனகராயன், சுதுமலையிலும் சம்பள உயர்வு கிடைத்தது

யாழ்ப்பாணம், ஞாயிறு

சுதுமலை, கனகராயன் குளம் ஆகிய சுருட்டு தொழிற்சாலைகளின் உரிமையாளரான திரு. வே. க. இராசலிங்கம் அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் கோரிக்கைப்படி ஆயிரம் சுருட்டுக்கு பதினைந்து ரூபா வழங்க ஒப்புக்கொண்டுள்ளனுத்துரை, எஸ். ஆறுமுகம், ஏ. என். நடராசா, வ. ரத்தினம் ஆகியோர் கனகராயன்குளத்திலுள்ள சுருட்டுத்தொழிற்சாலைக்கு சென்று வேலைசெய்து கொண்டிருந்த தொழிலாளர்களை நிறுத்தி, 5ரூபா வழங்குவதற்கான அறிவித்தல் வெளியிடும்வரை வேலை செய்யவேண்டாம் என்று

**மைலாய் படு கொலை**

## விசாரணைக் குழு நியமனம்

வாஷிங்டன், டிச. 13

தென்வியட்நாமில் 1968-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் மைலாய் என்ற கிராமத்தில் ஆண், பெண், குழந்தைகள் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட தென்வியட்நாம் மக்களை அமெரிக்கத் துருப்புக்கள் படுகொலை செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டு பற்றி ஆராய நான்கு அங்கத்தவர் குழுவொன்று நியமிக்கப்பட்டிருப்பதாக அமெரிக்க இராணுவ அதிகாரியொருவர் அறிவித்தார்.

## "விலகவேண்டும்"

கோயம்புத்தூர். டிச. 13

அச்சுதமேனன் தலைமையிலான சிறிய கூட்டணியினர் ஆட்சியிலிருப்பதற்கு அருகதையற்றவர்களென்றும் அந்த மந்திரிசபையைக் கவிழ்ப்பதற்கு முயற்சிசெய்யப் போவதாகவும் இந்திய மார்க்ஸிஸ கட்சித்தலைவர் திரு. ஏ. கே. கோபாலன் தெரிவித்தார்.

மேற்கு வங்காளத்தில் சட்டமும் ஒழுங்கும் குலைந்திருக்கிறதென்று மேற்கு வங்க முதன்மந்திரி அஜோய் முக்கர்ஜி கருதினால் பதவியிலிருந்து விலகிச் செல்வதுதான் நியாயம் என்றும் திரு. கோபாலன் கூறினார்.

## அண்ணாமலை பல்கலைக்கழகம் மூடப்பட்டது

சென்னை, டிச. 13

தெரிவுப் பரீட்சைகளை ரத்துச் செய்யக் கோரி அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்கள்

## இராணுவ புரட்சிச்சபை

## சூடானில் புரட்சி முறியடிப்பு

கார்ட்டும், டிச. 13

சூடான் அரசாங்கத்தைக் கவிழ்க்கச் செய்யப்பட்டசதி முயற்சியை அரசாங்கம் முறியடித்துவிட்டதாக அரசாங்க உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஏதேச்சாதிகாரிகளும் முதலாளித்துவவாதிகளும் இந்த அரசாங்கத்தை கவிழ்க்க முயன்றதாக அமைச்சர் ஒருவர் தெரிவித்தார். சூடானில் இப்போதுள்ள புரட்சி அரசாங்கம் ஏழரை மாதங்களுக்கு முன்னர்தான் ஆட்சிக்குவந்தது.

## "கடின உழைப்பு வேண்டும்"

கல்கத்தா, டிச. 13

நாட்டைத் தன்னிறைவுடையதாகவும் தற்காப்புடையதாகவும் செய்வதற்கு மக்கள் கடினமாக உழைக்க வேண்டுமென்று எல்லைக் காந்தி கான் அப்துல் கபார்க்கான் கல்கத்தாவுக்கு அருகில் பராக்பூர் என்ற இடத்தில் ஒருபொதுக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

மக்களுக்குத் தீவிரதேசிய உணர்வுவேண்டுமென்றும் அவர் சொன்னார்.

## ஆசிரியைக்குப் பிரிவுபசாரம்

பருத்தித்துறை, சனி

"கலை, விஞ்ஞானப் பகுதிகளுக்கிருந்த மதிப்புக் குறைந்து கைத்தொழில்விவசாயம், மரவேலை ஆகிய தொழிற்கல்விக்கு முக்கியத்துவம் தோன்றியுள்ளதை உணர்ந்த அரசாங்கம் இன்று இத்துறைகளைப் பல்கலைக் கழகங்களிலும், ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளிலும் ஆரம்பித்துள்ளது வரவேற்கத்தக்கது. இவ்வித துறைகள் மூலம் போதிய வேலை வாய்ப்புகளைத் தோற்றுவிப்பதுடன் நாட்டின் [illegible]லையில்லாத் திண்டாட்டத்தையும் பெருமளவு குறைக்க முடியும்.

இவ்வாறு இன்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியப் பேரவை[illegible]ல், பலாலி ஆசிரிய பயிற்சிக்

## உளஉறுதியை வளர்க்கும் சித்திரம்

யாழ்ப்பாணம், சனி

இக்காலத்து மக்கள் பொருளீட்ட வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு விஞ்ஞான கலை பாடங்களைப் பயில்கின்றனர். ஆனால் சிறுவர்களுக்கு உடல் உறுதியும் உள உறுதியும் தேவை உள உறுதியைவளர்க்க சித்திரக் கல்வி இன்றியமையாதது.

வேலணைமத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற சிறுவர் சித்திரக் காட்சியை திறந்துவைத்துப் பேசியவட மாநில சித்திர வித்தியாதரிசி திரு. ஆ. தம்பித்துரை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில் வேலணைப் பகுதியில் முதல்முறையாகத் தனிப்பட்ட பாடசாலை முறையில் சித்திரக்காட்சி ஒன்றைவைத்து மாணவர்களுக்கு ஆர்வமூட்ட வந்துள்ளதுவேலணை மத்திய மகா வித்தியாலயமொன்றுதான் எனக்குறிப்பிட்டார்.

'கலைகள் ஒரு நாட்டின் பண்பாட்டைக் காட்டுவன. இதனாற்றான் மேலைத் தேசத்தவர்கள் சித்திரங்களை உயிர் போல்காத்து வருகின்றனர்' எனஇக்கண்காட்சி திறப்பு விழாவில் உரையாற்றிய மேற்படி வித்தியாலய அதிபர் குறிப்பிட்டார்.

## திருமலைச் செய்திகள்

**கரடி கண்ணைப் பிடுங்கியது**

கோமரசங்கடவையைச் சேர்ந்த நபர் ஒருவர் வேட்டையாடக் காட்டுக்குச் சென்றபோது கரடி ஒன்று அவர் கண் ஒன்றைத் தோண்டி விட்டது. உடலில் பலத்த காயங்களுடன் அந் நபர் திருமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**கன்னியாவில் கால்நடைப் பண்ணை**

கன்னியாவில் 1000 கால்நடைகளைக் கொண்ட பண்ணையொன்றை திருமலை அரசாங்க அதிபர் திறந்து வைத்தார். இக்கால்நடைப் பண்ணைக்கென 250 ஏக்கர் காடு அரசாங்கத்தால்கொடுக்கப்படவிருக்கின்றது.

**புல்மோட்டையில் யூ. என். பி. கிளை**

புல்மோட்டையில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான

## விமானத்தை திசைதிருப்ப முயன்ற இருவரும் கொலை

மாட்ரிட், டிச 13

மாட்ரிட்டிலிருந்து மத்தியதரைமார்க்கமாக ரோமுக்கும் அடிஸ் அபாபாவுக்கும் சென்றுகொண்டிருந்த எத்தியோப்பிய விமானம் ஒன்றைஆகாயத்தில்வைத்து மிரட்டி திசைதிருப்பிக் கொண்டுசெல்ல முயன்ற இருவரை விமானிகளும் பிரயாணிகளுமாகச் சேர்ந்து கொன்றுவிட்டதாக தகவல் கிடைத்துள்ளது.

அரபு கொமாண்டோ இயக்கத்தைச் சேர்ந்தவர்களெனக் கருதப்படும் அந்த இருவரும் ஆயுதங்களை ஏந்தியபடி விமானிகளை மிரட்டியபோது விமானிகளும் பிரயாணிகளுமாகச் சேர்ந்து இருவரையும் பிடித்துக் கொண்டனராம்; இருவரும் நடத்திய போராட்டத்தின் போது அவர்கள் வைத்திருந்த ஆயுதங்களினாலேயே சுட்டுக் கொல்லப்பட்டனராம். இந்தவிமானத்தில் 21 பிரயாணிகள் இருந்தனர்.

## இத்தாலியில் குண்டு வெடித்து 14 பேர் மாண்டனர்

மிலான் டிச,13

இத்தாலியில் நேற்று சில இடங்களில் நடைபெற்ற மர்மான வெடிகுண்டுச் சம்பவங்களில்குறைந்தது14 பேர்மாண்டனர். நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

மிலான் வங்கி யொன்றில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு ஒன்று வெடித்த போது அங்கிருந்தவர்களில் நால்வர் கொல்லப்பட்டனர் கட்டிடத்திலிருந்தவர்கள் குண்டுவெடித்ததும் நாலா பக்கமும் சிதறியோடினர். மிலானின் மற்றுமிரு இடங்களிலும் வெடிகுண்டுகள் வெடித்தன. ரோம்நகரிலும் இரு இடங்களில் வெடிகுண்டுவெடித்தசம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

மர்மவெடி குண்டு வெடித்தசம்பவங்கள் சம்பந்தமாக நால்வரைப் பொலிசார் சந்தேகத்தின் மீது கைதுசெய்து விசாரணை செய்துவருகின்றனர்.

வெடிகுண்டுச் சம்பவங்கள் பற்றி இத்தாலிப்பிரதமரும் அதிபரும் கவலையும் கண்டனமும் தெரிவித்தனர். ஜனநாயகத்தைக் குலைக்கும் செயல் இதுவென்றும் இதைச் சும்மாவிட முடியாதென்றும் பிரதமர்கூறினர்,

## "ஒத்துழைப்பின் மூலமே முன்னேற்றம் காணலாம்"

யாழ்ப்பாணம், ஞாயிறு

'பெற்றோர்கள் பாடசாலை முன்னேற்றத்துக்கு உறுதுணை புரிய வேண்டும். எந்தப் பெற்றோராயினும் பாடசாலை முன்னேற்றத்தில் தடையாயிருக்கமாட்டார்கள் என்பது உண்மை. எனினும் அவர்களின் ஒத்துழைப்பின்மூலமே முன்னேற்றம் காணலாம்.'

இவ்வாறு யாழ்ப்பாணஇந்துக் கல்லூரி அதிபர் திரு. ந. சபாரத்தினம் கல்லூரிப் பெற்றோர் ஆசிரியர்சங்க வருடாந்தக் கூட்டத்திற்குத் தலைமைதாங்கிப் பேசுகையிற் குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறியதாவது: 'அண்மையில் நடந்தேறிய கல்வி நூற்றாண்டு விழாவின்போது எமது கல்லூரி விடுதிச்சாலையிலே விருந்தினர்களாய்த் தங்கியிருந்த வெளிமாகாணப் ஓங்கியுள்ளது. இதில் சம்பந்தப்பட்ட விடுதி அதிபர், விடுதித்துணை அதிபர் சிப்பந்திகள் யாவருக்கும் எனது பாராட்டுக்கள் உரியன.

தலைமையுரையைத் தொடர்ந்து நடப்பு வருட உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது. தலைவராகத் திரு. ந. சபாரத்தினமும், உபதலைவர்களாக டாக்டர் எஸ். அருணாசலமும், திரு. எஸ். செந்தில்நாதனும், காரியதரிசியாகத் திரு. க. சிவராமலிங்கமும், தனதிகாரியாகத் திரு. எம். மகாலிங்கமும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

அடுத்துபாடசாலையிற் சிங்களம் கற்பித்தல்பற்றிய கருத்துப் பரிமாறல்கள் சுமுகமான முறையில் நடை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாளரான திரு. வே. க. இராசலிங்கம் அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் கோரிக்கைப்படி ஆயிரம் சுருட்டுக்கு பதினைந்து ரூபா வழங்க ஒப்புக்கொண்டுள்ளதாக நோட்டீஸ் ஒன்றின் மூலம் அறிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அகில இலங்கைஐக்கியசுருட்டு தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த திருவாளர்கள் ஆ. துரைராஜசிங்ம், கே. பொன்

டுத்தொழிற்சாலைக்கு சென்று வேலைசெய்து கொண்டிருந்த தொழிலாளர்களை நிறுத்தி, 5 ரூபா வழங்குவதற்கான அறிவித்தல் வெளியிடும்வரை வேலை செய்யவேண்டாம் என்று கூறி இதுபற்றி நிர்வாகத்துக்கும் தெரிவித்தனர்.

இதனையடுத்து 15 ரூபாய் வழங்கச் சம்மதிப்பதாக அறிவித்தல் பகிரங்கமாக வெளியிடப்பட்டது.

# 'அரசியல் அறிவு ஒவ்வொரு பெண்களுக்கும் இருக்கவேண்டும்'

### மாதர் மாநாட்டில் திருமதி ஜி. ஜி.

யாழ்ப்பாணம், ஞாயிறு

''தமிழரசுக்கட்சியின் பாதையில் செல்வதால் தமிழ்மக்களுக்கு விமோசனம் கிடைப்பதென்பதை கடந்த 14 வருடங்களாக உணர்ந்துவிட்டார்கள். சிங்கள மக்களுடன் ஒத்துழைத்துத் தான் நமது உரிமையைப் பெற முடியும் என்ற தமிழ்க்காங்கிரசின் கொள்கையே சரி என்பதை இன்று தமிழ் மக்கள் உணர்ந்துவிட்டார்கள்.''

சாவகச்சேரியில் நேற்று நடந்த தமிழ்க்காங்கிரஸ் தென்மராட்சிக் கிளை மாதர் மகாநாட்டில் திருமதி ஜி. ஜி. பொன்னம்பலம் பேசும்பேசும்போது மேற்கண்டவாறு கூறினர்.

திருமதி தேவரத்தினம் கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில் திருமதி பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:

பெண்ணினத்தின் ஆதரவில்லாமல் எந்த சமூகமும் முன்னேறிவிட முடியாது. எமது பிள்ளைகளின் எதிர்காலம் சிறக்க வேண்டுமானல் அவர்களுக்கு சரியான வழியை நாம் காட்ட வேண்டும். பெண்கள் அரசியலில் ஈடுபடவேண்டியது அவசியம். அப்படியானல் தான் சிறந்த ஒரு சமுதாயத்தை உருவாக்க முடியும். அரசியல் அறிவு ஒவ்வொரு பெண்களுக்கும் இருக்க வேண்டும்.

60-ம் ஆண்டுக்குப் பின் எமது பிள்ளைகளின் முன்னேற்றம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுவிட்டது. இனிமேலாவது நீங்கள் சரியான பாதையில் செல்ல வேண்டும்.

திருமதி சங்கரப்பிள்ளை, திருமதி செல்லக்குட்டி, திருமதி ச. சோமசுந்தரம் ஆகியோரும் பேசினர்கள்.

படுத்தவேண்டுமென்று பிரதமர் சொல்டா மெயர் கூறினர்.

## இராணுவ புரட்சிச்சபை

லண்டன், டிச. 13

சிலதினங்களுக்கு முன் இராணுவப்புரட்சி நடைபெற்றமேற்கு ஆபிரிக்க நாடான டகோமியில் மூவர் கொண்ட இராணுவசபையொன்று நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளது. புரட்சியை நடத்தியகேணல் மொரிஸ் குவாண்டே இச்சபையின் தலைவர். விரைவில் பொதுத்தேர்தல் நடத்துவதற்கான ஏற்பாடுகளையும் இச்சபை கவனித்துக் கொள்ளுமாம்.

புரட்சியின்போது கைது செய்யப்பட்டு வடக்கு டகோமிக்குக் கொண்டு செல்லப்பட்ட கோமியின் அதிபர் ஸின்ஸு இன்றே நகருக்குக்கொண்டுவரப் பட்டுவிடுதலை செய்யப்படுவாரென்றும் இராணுவ சபைத் தலைவர் தெரிவித்தார்.

## இந்தியா திரும்பியவர்கள்

கோட்டை, சனி

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்படி நவம்பர் 30-ந் திகதி வரை 60,147 பேருக்கு இந்தியப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்ட 30-10-1964லிருந்துஇவ்வருடம் ஒக்டோபர் மாதம் வரையில் 29,030 பேர் நாடு திரும்பியுள்ளனா.

## மூடப்பட்டது

சென்னை, டிச. 13

தெரிவுப் பரீட்சைகளை ரத்துச் செய்யக்கோரி அண்ணமலைப்பல்கலைக்கழக மாணவர்கள் கிளர்ச்சி செய்து வந்ததைத் தொடர்ந்து அண்ணமலைப் பல்கலைக்கழகம் தற்காலிகமாக மூடப்பட்டது.

## மலேஷியாவில் பெருவெள்ளம்

### 34 பேர் பலி

கோலாலம்பூர், டிச. 13

மலேஷியாவிலும் சிங்கப்பூரிலும் பெருவெள்ளம் ஏற்பட்டுள்ளது சமீபகாலம் அறிந்திராத இவ்வெள்ளப் பெருக்கினல் குறைந்தது 34 பேராவது மாண்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது. வெள்ளத்தினல் வீடுவாசல்களை இழந்த ஆயிரக்கணக்கானேர் பாதுகாப்பான இடங்களில் தஞ்சம்புகுந்துள்ளனர். பாதிக்கப்பட்ட பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் அளிக்கும் வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

## அமெரிக்க-சீன பேச்சுவார்த்தை

வாஷிங்டன், டிச. 12

போலந்து தலைநகரான வார்சாவில் அமெரிக்க தூதரும் நவசீனத் தூதரும் சந்தித்துப் பேசியதாகவும் இச்சந்திப்பு சீனத் தூதரகத்தில் நடைபெற்றதாகவும் அமெரிக்க ராஜாங்கஇலாகா தெரிவித்தது.

யில்லாத திண்டாட்டத்தையும் பெருமளவு குறைக்க முடியும்.

இவ்வாறு இன்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியப்பேரவையால், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைப் பயிற்சிக்கெனத் தெரிவுசெய்யப்பட்ட திருமதி சொர்ணம்பிகை சதாசிவத்திற்கு அளிக்கப்பட்ட பிரிவுபசாரக் கூட்டத்தில் ஆசிரியர் திரு. எஸ். தாமோதரம்பிள்ளை கூறினர். பேரவைத்தலைவர் திரு. வி. மகாலிங்கம் வைபவத்திற்குத் தலைமைதாங்கினர்.

பேரவையால் வழங்கப்பட்ட அன்பளிப்புகளுக்கு திருமதி சதாசிவம் நன்றி கூறினர். பண்டிதர் க. வீரகத்தி, திருவாளர்கள் ஏ. ஜெகநாதன், பி எல். எம். மனுவேற்பிள்ளை, த. சிதம்பரப்பிள்ளை ஆகியோரும் பேசினர்.

## வாழை ஆராய்ச்சி நிலையம்

கோப்பாய், சனி

'நமது பொருளாதார வளர்ச்சிக்கு அத்தியாவசியமாக அமைந்துள்ள வாழைகளை நவீன முறையில் விருத்தியாக்கக்கூடிய வழிகளை கண்டறிவதற்கான ஆராய்ச்சி நிலையமொன்று நிறுவுவது அவசியம்' என வடமாநில ஐக்கிய மேற்பார்வைச்சபை உத்தியோகத்தர் திரு. சி. எஸ். குக் வலிகிழக்கு வாழைக்குலை விற்பனவுச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

காடு அரசாங்கத்தால்கொடுக்கப்படவிருக்கின்றது.

## புல்மோட்டையில் யூ. என். பி. கிளை

புல்மோட்டையில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான கிளையை திரு. வி. ஆர். நவரத்தினராசா திறந்து வைத்தார்.

## இவர்களுக்கு போனஸ் இல்லை

கடந்த மாதம் 6-ம் திகதியுடன் ஒரு வருடம் பூர்த்தியான துறைமுகத் தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்கவில்லை என தொழிற்சங்கங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தந்திமூல அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஒருபயனுமில்லை

திருமலை அரசாங்க ஆஸ்பத்திரிக்கு நியமிக்கப்பட்டிருக்கும் உத்தியோகப்பற்றற்ற பார்வையாளர்களினல் எதுவித பயனுமில்லையென பொதுமக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

## வீதிகள் பெயர் மாறும்

திருமலை நகர வீதிகளுக்கு அறிஞர்களதும், பெரியார்களதும் பெயர்களைச் சூட்டுவதற்கு திருமலை நகரசபை முயற்சி செய்து வருகின்றது.

திருமலை நகரசபை எல்லைக்குள் இருக்கும் பொருத்தமில்லாத வீதிகளின் பெயர்களை நீக்கிவிட்டு திருமலையில் வாழ்ந்த அறிஞர்களதும் பெரியாாகளதும் மற்றும் தொண்டர்களதும் பெயர்களைச் சூட்டுவதெனச் சபை தீர்மானித்துள்ளது.

மேலும் அவர் கூறியதாவது: 'அண்மையில் நடந்தேறிய கல்வி நூற்றுண்டு விழாவின்போது எமது கல்லூரி விடுதிச்சாலையிலே விருந்தினர்களாய்த் தங்கியிருந்த வெளிமாகாணப் பாடசாலை மாணவர்களைச் சிறந்த முறையிலே உபசரித்த திறமையால் எம்கல்லூரியின் புகழ் மேலும்

பினர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

அடுத்துபாடசாலையிற் சிங்களம் கற்பித்தல்பற்றிய கருத்துப் பரிமாறல்கள் சுமுகமான முறையில் நடைபெற்று இதுபற்றிய முடிவு உரிய காலத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என முடிவு செய்யப்பட்டது.

### "யாழ். மாநகரசபை ஊழியர்

# சம்பளம் மாற்றியமைக்க ஆணைக்குழு வேண்டும்"

### தீர்மானம் வருகிறது

யாழ்ப்பாணம் ஞாயிறு

கடந்த 14 ஆண்டுகளாக மாற்றியமைக்கப் படாதிருக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை ஊழியர்களது சம்பளத் திட்டம் விரைவில் மாற்றியமைக்கப் படலாம். இவ்வாறு மாற்றியமைக்க ஓர் சம்பள ஆணைக் குழுவை நியமிக்குமாறு உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவை யாழ். மாநகர சபை கேட்கும்.

இதற்கான பிரேரணை இம்மாதம் 17-ம் திகதி நடைபெறவிருக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் கொண்டுவரப் படவிருக்கின்றது.

இந்தப் பிரேரணைக்கான முன்னறிவித்தலை நல்லூர் வட்டார அங்கத்தவரான வைத்தியர் திரு. அ. நடராஜா கொடுத்துள்ளார். இப்பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளிலிருக்கும் சபை ஊழியாகளது சம்பள 1955-ம் ஆண்டின் சப்பள ஆணைக்குழுவின் சிபார்சின்படியே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சாதாரணமாக அரசாங்க உள்ளூராட்சி ஊழியர்களது சம்பளம் ஒவ்வொரு பத்து ஆண்டுகளுக்கும் ஒரு முறை மாற்றியமைக்கப்படுவது வழக்கம். ஆனல் யாழ்ப்பாண மாநகரசபை ஊழியர்களது சம்பளம் கடந்த 14 ஆண்டுகளாக மாற்றியமைக்கப்படவில்லை. அத்துடன் அண்மைக்காலத்து உள்ளூராட்சி மசோதாவின்படி மாநகரசபைக்கு 125 ரூபா வரை அடிப்படைச் சம்பளம் வழங்குவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது

ஆகவே உடனடியாக உள்ளூராட்சி மன்றங்களின் சேவையிலிருக்கும் சபைஊழியர்களது சம்பளத்தை மாற்றியமைப்பதற்கு ஒரு சம்பள ஆணைகுழுவை நியமிக்குமாறு உள்ளூராட்சிஅமைச்சரை வேண்டுவது என்பதாகும்.

நல்லூரில் ஒரு சாராயத் தவறணையும், ஹோட்டலும் பாரும் அமைத்துத்தருமாறு உள்நாட்டு அமைச்சரைக் கோருவதென்பது. திரு. அ. நடராசாவின் மற்றெரு பிரேரணையும். (கா. நி)


## இடமாற்றத்திற்கு ஆட்சேபம்

உரும்பராய், சனி

எட்டியாந்தோட்டையிலிருந்து தமிழ் தெரியாத காரியதரிசி ஒருவர் உரும்பராய் பட்டினசபைக்கு இடமாற்றலாகி வருவதை ஆட்சேபித்து உரும்பராய் பட்டினசபைத் தலைவர் திரு. க, பத்மராசா உள்ளூராட்சி உதவிஆணையாளரிடம் முறையீடுசெய்துள்ளார்.

இங்கு கடமையாற்றிய காரியதரிசி திரு. ஜி. சிகிருபரட்ணம் ஏருவூருக்கும் எட்டியாந்தோட்டையில கடமையாற்றிய திரு. கே. டி. சில்வா உரும்பராய்க்கும் வருகிற ஜனவரி முதலாம் திகதி இடமாற்றம் பெற்றுள்ளனர். தமிழ் தெரியாத ஒருவர் தமிழ்ப்பகுதிக்கு இடமாற்றலாகி வருவதை ஆட்சேபித்து உள்ளூராட்சிஅமைச்சருக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக திரு. பத்மராசா தெரிவித்தார்.

உரும்பராய் பட்டினசபையின் வருடாந்த வரவுசெலவுவிவாதம் அண்மையில் நடைபெற்றது. வரவு செலவுத்திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது இருபக்கத்துக்கும் 4 - 4 வாக்குகள் கிடைக்கவே பட்டினசபைத் தலைவர் தனது மேலதிக வாக்கைப் பிரயோகித்து வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றினர்.



பலாலி ஆசிரியர் கலாசாலை வர்த்தக பிரிவில் விசேஷ பயிற்சிபெற்று இவ்வருடம் வெளியேறும் ஆசிரியர்கள் தமது பேராசிரியர்களுடன் காணப்படுகிருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

உலக வாழ்வு கண்ணிமைக்கும் பொழுதிற்குள் அழிந்துவிடக்கூடியது. கொடுமை, போட்டியை மறந்து அஹிம்சையை நாடுவது நல்ல வழி.

—மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் செளமிய வருஷம் கார்த்திகை மாதம் 29-ந் திகதி (14-12-69)


## கோடீஸ்வரன் வழக்கு

'ஓர் அரசாங்க ஊழியர் அரசாங்கத்துக்கெதிராக வழக்காட முடியாது' இலங்கை 'சுப்ரீம்கோர்ட் கோடீஸ்வரன் வழக்கில் அளித்த தீர்ப்பை அப்பீல் மனுவை விசாரணை செய்த லண்டன் பிரிவிகவுன்ஸில் நிராகரித்திருக்கிறது. பிரிவிகவுன்ஸிலின் தீர்ப்பு விபரம் இன்னும் முழுமையாகக்கிடைக்கவில்லை. ஆயினும் அரசாங்கத்துக்கெதிராக அரசாங்க ஊழியர் ஒருவர் வழக்காட முடியுமென அளிக்கப்பட்டுள்ள தீர்ப்பு, மொழி மற்றும் சட்ட நடவடிக்கைகளாலும் நிர்வாக ரீதியிலும் பாதிக்கப்படும் சிறுபான்மைச் சமூகத்தவர்களுக்கு நியாயம் கிடைக்க முடியுமென்ற நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது.

அரசாங்க ஊழியரான திரு கோடீஸ்வரனுக்கு அவர் உத்தியோக மொழியில் தேர்ச்சி பெறவில்லையென்ற காரணத்தினால் சம்பள உயர்வு நிறுத்தப்பட்டது. இதை எதிர்த்து அவர் தாக்கல் செய்த மனுவை விசாரித்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம் 'சிங்களம் மட்டும்' சட்டமே செல்லுபடியாகாதென்று தீர்ப்பு வழங்கியிருந்ததும் இதை எதிர்த்து அரசாங்கம் தாக்கல் செய்த மனுவைசுப்ரீம் கோர்ட் விசாரணைசெய்து அரசாங்கத்துக்கு எதிராக வழக்காட அரசாங்க ஊழியர் ஒருவருக்கு உரிமையில்லையென்று தீர்ப்பளித்து இதர விஷயங்களைப்பற்றிய பிரச்னையே எழவில்லையென்றும் தெரிவித்திருந்தது அனைவரும் அறிந்ததே.

பிரிவிகவுன்ஸில் இப்போது அளித்திருக்கும் தீர்ப்பைத் தொடர்ந்து சிங்களத்தில் தேர்ச்சி [illegible] பெறத் தவறியதற்கு சம்பள உயர்வை நிறுத்திவைப்பது, சிங்களம் மட்டும் சட்டத்தின் அந்தஸ்து ஆகியவைபற்றி இலங்கை சுப்ரீம் கோர்ட் மறுபரிசிலனை செய்யவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படலாம்,

கோடீஸ்வரன் வழக்குளது வாயிருந்தாலும் இன்றுள்ள நிலையில் பிரிவிகவுன்சிலின் உதவியை நாடியாவது பாதிக்கப்படும் மக்கள் நீதிபெற வாய்ப்பிருக்கிறதென்ற நம்பிக்கையைத் தருகிறது,

முன்னர் ஒரு வழக்கில் பிரிவிகவுன்ஸில் இலங்கை அரசியல் அமைப்பின் 29-வது விதியை வைத்து தீர்ப்பு அளித்திருந்தது, இதனால் அரசியல் அமைப்பிலிருந்து 29-வது விதியை நீக்க வேண்டுமென்றும் புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதுடன் இலங்கையைக் குடியரசாக்கி பிரிவிகவுன்ஸிலுக்கு அப்பீல் செய்யும் உரிமையை இல்லாமல்செய்ய வேண்டும். இங்கு சிலர்கருத்துத் தெரிவித்து பிரசாரமும் செய்து வந்தனர். இந்தப் பிரசாரம் இனி ஓர் இயக்கமாக உருவெடுக்கலாம்.

அரசியல் அமைப்பின் 29-வது விதி இங்குள்ள சிறுபான்மையினரின் உரிமைகளைப் பூரணமாகப் பாதுகாக்கவில்லையானாலும் அது ஓரளவாவது பாதுகாப்பளிக்கிறதென்பதை ஒப்புக்கொள்ளவேண்டும்,

அரசியல் அமைப்பில் திருத்தம் செய்வதானாலும் புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதானாலும் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கும் விதிகளும் ஐ.நா மனித உரிமைச் சாஸனமும் இணைக்கப்படாமல் 29-வது விதியை நீக்கவோ பிரிவிகவுன்ஸிலுக்கு அப்பீல் செய்யும் உரிமையை ரத்துச் செய்யவோ முயற்சிசெய்வதுநல்லதல்ல. அது விவேகமுமாகாது.

ஆசிரியருக்கு கடிதங்கள்

## சேர் பொன். இராமநாதன் நினைவு நாள்

27-11-69ல் வெளியான தங்கள் பத்திரிகையின் 'ஐயாறன்' பகுதியில் அரசியல் ஞானியும், கொடைவள்ளலுமான சேர் பொன் இராமநாதன் அவர்களின் மறைந்த நாள் பற்றி லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டரைப் பார்த்ததாகக் குறிப்பிட்டிருந்தீர்கள்.

சேர் பொன் இராமநாதன் நினைவு தினம் கொண்டாடும் ஸ்தாபனங்கள் யாவும் நவம்பர் 26ந் திகதியையே அத்தினமாகக் கடைப்பிடித்து வருகின்றன. 30 வருடங்களுக்கு முன்பே, கொழும்பில் காலஞ்சென்ற திரு. எஸ்,ரி.கனகசபையைத் தலைவராகவும், திரு. ச. த. சின்னத்துரையைச் செயலாளராகவும்கொண்டு கொழும்பு-யாழ்ப்பாண வாலிபர் சங்க ஆதரவில், மேட்டுத்தெரு விவேகானந்தசபை மண்டபத்தில் நவம்பர் 26ந் திகதியன்றே நினைவு தினம் கொண்டாடப்பட்டதை நினைவுறுத்த விரும்புகிறேன்.

'ஐயாறன்' பகுதியை வாசித்தவுடன், ஆட்சிமன்ற முன்றலிலுள்ள அப்பெருமகனின் சிலையண்டை போய்ப் பார்த்தபோது, அச்சிலையின் அடியில் அவர் பிறந்த, மறைந்த திகதிகள் காணப்படாததையிட்டு ஆச்சரியப்பட்டேன். ஆனாலும் எமது கலண்டரில் அவர் தோற்றம் 15-4-1851, மறைவு 26-11-1930 எனச் சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 26-11-69ல் ஆட்சிமன்ற முன்றலிலுள்ள சேர் பொன் இராமநாதன் சிலைக்கு எண்ணெய்க்காப்பு சார்த்தி, மாலையிட்டு மரியாதை செலுத்தினர். அவ்வமயம் விவேகானந்தசபைச் செயலாளரும், அங்கு சென்று சிலைக்கு மாலையணிவித்து மரியாதை செலுத்தியுள்ளார். ஆனால் அப்பெருமகனின் உறவினர்களோ, பொதுமக்களோ அங்கு காணப்படாதது மனவருத்தத்திற்குரிய விடயமாகும். அன்றைய தினம் கொழும்பில் பல நினைவு தினக் கூட்டங்கள் நடைபெற்றன. அவைகளில் கைவிரல் விட்டு எண்ணக்கூடியவர்களே சமுகமளித்திருந்தனர். தமிழ்ப் பெரியார்களை நினைவு கூர்வதில் தற்போதைய சந்ததியினர்க்கு இருக்கும் ஆர்வம் இவ்வளவுதானு என்ற கிலேசம் எல்லோர் மனதிலும் ஏற்பட்டது.

எனவே இவ்வகையான ஐயப்பாடுகளைத் தவிர்ப்பதற்காக, 1970ம் ஆண்டு 'லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டரில்' பெரியார் சேர் பொன். இராமநாதனின் பிறந்த தினக் கொண்டாட்டம் 15-4-1970ல் என்றும், நினைவு தினக் கொண்டாட்டம் 26-11-1970ல் என்றும் சைவ முறைப்படி திதி வரும் தினமான 3-12-70 அன்று குருபூசைத் தினம் என்றும் குறிப்பிட்டுள்ளதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

தயவுசெய்து, இவ்விடயத்தைப் பிரசுரித்து, மக்கள் மனதில் ஏற்படும் ஐயப்பாடுகளைப் போக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ச. த. சின்னத்துரை.

நியூ லீலா பிரஸ்,
கொழும்பு-12.

## ஏன் இந்த தாமதம்?

டில்லியில் சிறிமா சாஸ்திரி செய்துகொண்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தை இந்திய தூதராலயம் செயல்படுத்துமளவு இலங்கை அரசாங்கம் செயல்படுத்தவில்லையென்றே கூறவேண்டும். இங்குள்ள இந்தியத் தூதராலயம் 60 ஆயிரத்துக்கு மேற்பட்ட இந்திய வம்சாவழியினருக்கு இந்திய பிரஜாவுரிமை வழங்கியுள்ளது. ஏழுக்கு நாலு என்ற விகிதாசாரப்படி நேக்குமிடத்து 34,361 பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கியிருக்க வேண்டும். ஆனால் இதுவரை [illegible] வாழ்வு வாழ ஏன் இந்த அரசாங்கம் முட்டுக்கட்டையாகிறது? நாடு திரும்புபவர்களுக்கு வேண்டிய செலாவணி பர்மிட், சேமிப்பு லாபநிதி ஆகியவற்றை விரைவாக வழங்குவதோடு இங்கு இருக்க விரும்பி விண்ணப்பித்தவர்களுக்கு பிரஜாவுரிமையையும் துரிதமாக வழங்கிவிட்டால் இந்திய வம்சாவழியினரின் நீண்டகாலப் பிரச்சினையொன்றுக்குத் தீர்வு காணப்பட்டதோடு அம்மக்களும் நாடற்[illegible] பெய[illegible] என்[illegible] நிம்மதியோடு வாழ [illegible]

## லண்டன் தேவாலயத்தில் காந்தி நூற்றாண்டு விழா

லண்டன், டிச. 14

மகாத்மா காந்தியின் நூற்றாண்டுவைபவத்தையொட்டி இங்கிலாந்திலுள்ள பல்வேறு ஸ்தாபனங்கள் விழாக்கள் எடுத்து, இந்தியாவின் இணையற்ற தலைவருக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றன. இவற்றில் பல இந்தியாவுடன் கலாச்சாரத் தொடர்புகள் எதுவுமற்ற தனிப்பட்ட ஸ்தாபனங்களாகும். இம்முறை லண்டனிலுள்ள மத ஸ்தாபனம் ஒன்றும் காந்திஜிக்கு விழா எடுத்துள்ளது.

லண்டனிலுள்ள தேம்ஸ் நதிக் கரையோரமாகவிருக்கும் சவுத்வாக் தேவாலயம், இம்மாதம் இரு ஞாயிறு இரவுகளை காந்தியின் நினைவுக்காக ஒதுக்கியுள்ளது. சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்ற வைபவத்தின்போது எழுத்தாளர்கள், அறிஞர்கள், சமூகத் தொண்டர்கள் பலர் கந்திஜிக்கு அஞ்சலி செலுத்தினர். இவர்களில் பிரபல பிரிட்டிஷ் எழுத்தாளரான திரு. ஜெவ்ரி ஆஸே, மனவியல் நிபுணரான திரு. பிரட்பிளம், பிரபல பிரிட்டிஷ் பத்திரிகையாளரான திரு. ஜோன் மவுண்ட் ஜோய் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

எதிர்வரும் 21-ந் திகதி இரவும் இத்தேவாலயத்தில் காந்தி நினைவாக உலக வறுமையை நீக்கக் கோரும் 'கைச்சாத்து' இயக்கம் ஒன்று இடம்பெறும். அத்துடன் கிராமிய நாடக நிகழ்ச்சியொன்றும் காந்திஜி பற்றி சினிமாப் படம் ஒன்றும் இடம்பெறவிருக்கின்றன.

## ஜ.தொ.கா. மகாநாடு இன்று ஆரம்பம்

### நாவலப்பிட்டியில் 3 நாள் நடக்கும்

நாவலப்பிட்டி ஞாயிறு

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் வருடாந்த மாகாநாடு இன்று தொடக்கம் மூன்று தினங்கள் நாவலப்பிட்டியில் நடைபெறுகிறது. நாவலப்பிட்டியில் அமைக்கப்பட்டுள்ள 'காந்திநகரில்' இம்மகாநாடு இடம்பெறும்,

இன்று விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டம் நடைபெறும். நாளை 15-ம் திகதி காலை நாவலப்பிட்டி நகரசபைத் தலைவர் ஜனப் எம். பதுர்தீன் காந்தி நகரைத் திறந்துவைப்பதைத் தொடர்ந்து நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். திரு. எஸ். அந்தோனிமுத்து வரவேற்புரை நிகழ்த்துவார். 11-30 மணிக்கு மாதர் மகாநாடும், 1 மணிக்கு வாலிபர் மகாநாடும் நடைபெறும், மாலை 2-30 மணிக்கு சொற்பொழிவுகளும், இரவு 8-30க்கு கலை நிகழ்ச்சிகளும் நிகழும்.

நாளை மறுதினம் 16-ம் திகதி குருகோயா பாலத்திலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகும், திரு. ஏ. அஸீஸ் தலைமையில் நடைபெறும் அன்றைய நிகழ்ச்சிகளில் தொழில் அமைச்சர் ஜனப் எம். எச். முகம்மது கலந்துகொண்டு பேசுவார்.

மாலை பொதுச்செயலாளர் திரு. வி, பி. கணேசன் வருடாந்தஅறிக்கை வாசிப்பார். தொடர்ந்து தீர்மானங்கள் பரீசீலனைக்குஎடுத்துக்கொள்ளப்படும்.

(கொழு. நிரு.)

'தோட்ட

## தொழிலாளருக்கு 97 சதம் சம்பளஉயர்வு நீதியானது'

### சம்பள நிர்ணய சபையில் உரை

கொழும்பு, சனி

"தோட்டத்தொழிலாளிகளின் தினசரிச் சம்பளம் அவர்களது உணவுக்குக் கூடப் போதமலிரு[illegible]து அசட்டை பண்ண[illegible]ய [illegible]லாளி தனது அன்றுடச் செலவுகளை ஓரளவு சரிக்கட்ட தினசரிசம்பளத்தில் 97 சதம் அதிகம் பெற வேண்டியதே நீதி" எனக் குறிப்பிட்டார் திரு. அஸீஸ்.

## நாட்டிலும் நகரிலும்

'பிள்ளை பிடிக்கும் சாமியார்' பீதி சமீபத்தில் மீண்டுமொரு முறை தலைதூக்கியது. நல்ல வேளையாக பொலிஸார் அதை 'பொத்' தென்று நசுக்கிவிட்டார்கள். இல்லாவிட்டால் அது காட்டுத்தீ போல நாடெங்கும் பரவி சனங்களுக்கு வீண் கவலையையும் அலைக்கழிவையும் கொடுத்திருக்கும்.

ஏதாவதொரு காரணத்துக்காக வீட்டை விட்டு ஓடிவிடும் சிறுவர்கள் மறுபடி வீடு திரும்பும்போது, தாய் தந்தையர் கண்டிப்பார்களே என்ற பயத்தினால், 'பிள்ளை பிடிக்கும் சாமியார்' தங்களை ஏமாற்றி அழைத்துப் போய்விட்டார் என்ெருரு பொய்யைக்கூறி 'சாமியார்' தலையிலும் பெற்ளோர்கள் கண்ணிலும் மண்ணைப் போட்டு தவறி விடுகிறார்களாம்; தீர விசாரித்த பின்பு பொலிஸாருக்கு இந்த தந்திரம் தெரியவந்துள்ளது.

பலவருடங்களுக்கு முன்பு இந்த 'சாமியார்' பீதி நாடு முழுவதையும் ஒரு கலக்கு கலக்கிவிட்டது. மந்திரவாதிகள் சாமி வேடம் போட்டுக்கொண்டு, தெருவழியே செல்லும் சிறுவர் சிறுமிகளை இனிப்பு முதலியன கொடுத்து ஏமாற்றிக் கொண்டுபோய், காட்டில் எங்கேயோ புதையல் எடுப்பதற்காக அவர்களை நரபலி கொடுக்கிறார்கள் என்று நாளடைவில் 'பரதேசித் தபாலில்' நாடு முழுவதும் செறிந்துவிட்டது. பெற்றோர்கள் நடுங்கிக்கொண்டு தங்கள் குழந்தைகளை பள்ளிக் கூடத்துக்கோ கடைத் தெருவுக்கோ விடாமல் பயந்துகொண்டிருந்தார்கள். காவி வேடம் பூண்ட அப்பாவி சாமிகளையும் சனங்கள் விரட்டித் துன்புறுத்தினர்கள் காவி வேடத் துவேஷம் வேண்டுமென்றே சிலரால் கிளப்பி விட்டதென்றும் ஒரு கதை பரவியது.

புதையலுக்கு நரபலி கொடுக்கும் கதை உண்மையோ பொய்யோ என்று இதுவரை எவருக்கும் தெரியாது. இதுபற்றி பொலிஸாருக்கு எவ்வித தகவலும் கிடைக்கவில்லை. நேரில் கண்டதாகவும் எவரும் கூறுவாரில்லை. சாதாரணமாக ஆயிரம், லட்சக் கணக்கில் எங்கேயாவது கொள்ளையோ களவோ நடந்துவிட்டால் [illegible]

வீட்டைவிட்டு வெளியேறத் தூண்டுகிறது. இதுவுமன்றி தற்காலத்துப் பிள்ளைகளுக்குத் தன்னம்பிக்கையும் ஓர்மமும் அதிகம். முற்காலத்திலோ; சோதனை பாசாகவில்லையென்றால் வீட்டில் விழக்கூடிய உதையையும் சகித்துக்கொண்டு இளைஞர்கள் வீடே தஞ்சம் என்று இருந்துவிடுவார்கள். அவர்களுக்கு வேறு புகலிடமில்லை. வீட்டுப் பிணைப்பை அறுத்துவிட்டு வேறேதாவது பிழைக்கும் வழிதேடிக் கொள்வோம் என்ற துணிச்சலான எண்ணம் அவர்களுக்கு வரவே மாட்டாது. அது போலவே இளம்பெண்களும் தாய் தந்தையர் சொல்லுக்கடங்கி அவர்களின் விருப்பப்படியே திருமணமும் செய்துகொள்வார்கள். இன்றைய பெண்ணுக்கு அவ்விதம் கீழ்ப்படியும் மனப்பான்மை குறைந்துகொண்டே வருகிறது. அவர்களுக்கிடையிலும் சுதந்திரப் புரட்சி நிலைவுகள் ஏற்பட்டுள்ளன

தாய் தந்தையரும் பாதுகாவலர்களும் இந்த சுதந்திரப் போக்கை எண்ணி மனம் வருந்திக்கொள்வதில் பிரயோஜனமில்லை. ஏனென்றால் இது இயற்கையாக நாகரீக பரிணமத்தில் நிகழும் ஒரு சர்வசாதாரணமான காரியம். தமது பிள்ளைகளுக்கு இப்படிப்பட்ட மனத்துணிவும், ஓர்மையும், தன்நம்பிக்கையும், சுதந்திர உணர்ச்சியும் இருக்கிறதையிட்டு எந்தத் தாய் தந்தையும் பெருமைப்படத்தக்க விஷயம். போட்டா போட்டி நிறைந்த இந்த உலகத்தில் இத்தகைய குணங்கள் இல்லாவிட்டால் முன்னேறிக்கொள்ள முடியாது.

— வழிப்போக்கன்

## கார்கள் இறக்குமதி இல்லை

கோட்டை, சனி

ஆட்சிமன்ற அங்கத்தவர்களோ அல்லது எதிர்வரும் தேர்தலில் போட்டியிடவிருக்கும் அங்கத்தவர்களோ தேர்தலுக்குப் பயன்படுத்துவதற்கு 'கார்களை' வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யவியலாது.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சர்களின் வார இறுதிக் கூட்டத்தில் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கு சம்பள உயர்வை நிறு த்திவைப்பது, சிங்களம் மட்டும் சட்டத்தின் அந்தஸ்து ... தல்ல. அது விவேகமுமாகாது.


## வெளிவந்துவிட்டது!

# 1970

## "ஈழநாடு"
## தினக் குறிப்பு

விலை: ரூ. 1-35 சதம்

## "ஈழநாடு"
## Pocket Diary

விலை: -75 சதம்

ஏராளமான தகவல்கள்!
நவீன அமைப்பு!!

எமது பத்திரிகை
விற்பனையாளர்களிடம்
பெற்றுக் கொள்ளலாம்


## மரண அறிவித்தல்

### சோமநாதர் வைராக்கியம் ஜோசப்

ஏழாலை தெற்கை சேர்ந்த சோமநாதர் வைராக்கியம் ஜோசப் காலமானார். இவர் தங்கப்பிள்ளையின் அன்புக் கணவரும், பரமானந்தம் [கிருஷிகபகுதி யாழ்ப்பாணம்], திருமதி செபரத்தினம் [ஆசிரியை விக்னேஸ்வரவித்தியாசாலை, ஏழாலை] ஆகியோரின் தகப்பனாரும் ஆ. ஜே. நவரத்தினம் [தலைமை ஆசிரியர், அமெரிக்கமிஷன் பாடசாலை, அளவெட்டி], திருமதி அருள்மலர் ஆகியோரின் மாமனாருமாவர். அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று மாலை 3-30 மணிக்கு ஏழாலை தெற்கிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெறும். 1461

இப்பத்திரிகை ஈழநாடுலிமிட்டெட்ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

என்ற விகிதாசாரப்படி நேக்குமிடத்து 34,361 பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கியிருக்க வேண்டும். ஆனால் இதுவரை 1430 பேருக்கே இலங்கை அரசாங்கம் இந்நாட்டுப் பிரஜாவுரிமை வழங்கியுள்ளது.

இவ்வாறு காலத்தைக் கடத்துவதோடு அரசாங்கம் நின்றுவிடாது. நாடு திரும்புகிறவர்களுக்கும் தொல்லையையே கொடுக்கிறது எனலாம். மேற்கூறிய இந்தியாப் பிரஜாவுரிமை பெற்ற அறுபதினாயிரம் பேரில் அரைவாசிப் பேருக்கே அரசாங்கம் தேசிய சேமலாப நிதி, செலாவணி பர்மிட் ஆகியவற்றை வழங்கியுள்ளது. மீதிப் பேருக்கு இதுவரை வழங்கவில்லை. நாடு திரும்புவது என்று தீர்மானித்த இம் மக்களுக்கு இத்தாமதம் மேலும் தொல்லையல்லவா?

இந்தியாவிலும் சென்று இம்மக்கள் நெருக்கடிக்களைச் சமாளிக்க வேண்டியுள்ளது. ஏனெனில் பர்மாவிலிருந்து ஆயிரக்கணக்கான தமிழர் அகதிகளாகத் தமிழ்நாடு திரும்பியுள்ளனர். இங்கு அவர்கள் தங்களுக்கென இடம் பிடித்து புதிய வாழ்க்கையை ஆரம்பிப்பதில் கஷ்டமுறுகின்றனர். இவ்வேளையில் மலேஷியாவிலிருந்து 60 ஆயிரத்துக்கு மேற்பட்ட இந்தியத் தமிழர்கள் இவ்வருட முடிவிற்குள் கட்டாயமாக நாடு திரும்ப வேண்டியுள்ளனர். இவர்கள் மலேஷியாவில் தங்குவதற்கு அளிக்கப்பட்டகால எல்லை இவ்வாண்டுடன் முடிவடைகிறது அதாவது மலேஷியப் பிரஜையில்லாத இவர்களுக்கு மலேஷிய அரசாங்கம் வழங்கிய தற்காலிக வாச பர்மிட் இவ்வாண்டு காலாவதியாகிறது.

இப்பெருந்தொகை மக்களெல்லாரும் இந்தியா திரும்பி தங்களுக்கு வசதியாக நல்ல இடங்களைப் பிடித்துக் கொள்ள முன்னர் தாங்களும் போய் அங்குள்ள நிலைமையை அறிந்து அதற்குத்தக தங்கள் வாழ்க்கை முறையை விரைவாக அமைத்துக் கொள்ள இலங்கையில் இருந்து நாடு திரும்புபவர்களுக்கு ஆசை இருக்காதா? ஏன் இந்த அரசாங்கம் போவதற்கு அனுமதியளித்து விட்டு அதற்கான வழிவகைகளைச் செய்வதில் தாமதிக்கிறது? இவ்வாறு தாமதிப்பதனால் அரசாங்கத்துக்கு ஏதும் நன்மையுண்டா? இங்குதான் கஷ்டப்படுகிறார்கள் என்றால் இவ்விந்திய வம்சவழியினர் தம்நாட்டிலாவது நல்லதொரு இடத்தைப் பிடித்து நல்

யொன்றுக்குத் தீர்வு காணப்பட்டதோடு அம்மக்களும் நாடற்றவர்கள் என்ற பெயர் நீங்கி நாடுள்ளவாஎன் நிம்மதியோடு வாழ ஏதுவாகவிருக்கும்.

கே. மணி
நாவலப்பிட்டி.

## தவறு

11-12-69 ஈழநாட்டின் முதற் பக்கத்தில் தமிழ்வர்த்தக பாடத்தின் தரம் நன்கு உயரவேண்டும் என்ற தலைப்பின்கீழ் வெளியான செய்தியில் சில தவறுகள் இடம் பெற்றுள்ளதென்பதை சுட்டிககாட்ட விரும்புகிறோம்.

இலங்கை தமிழ் வர்த்தக ஆசிரிய சங்கத்தினரால் இக்கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டதாகவும் வர்த்தக மாவட்ட வித்தியாதிகாரி திரு வே. அழகேசன் தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றதாகவும் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் வர்த்தக ஆசிரிய சங்கத்தினரால் இக் கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்படவில்லையென்பதையும்இக் கருத்தரங்குக்கு வடபகுதி வித்தியாதிபதி திரு எஸ் தணிகாசலம் தலைமை வகித்து ஆரம்பஉரை நிகழ்த்தினார் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

வி. அழகேசன்
(வர்த்தக வித்தியாதிகாரி)
யாழ்ப்பாணம்.

## முதற்திவ்விய நற்கருணை

பச்சிலைப்பள்ளி, சனி

தாளையடியைச் சேர்ந்த பதினைந்துக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு கடந்த 8-ம் திகதி திங்கட்கிழமை தாளையடி அர்ச் அந்தோனியார் ஆலயத்தில் முதற் திவ்விய நற்கருணை வழங்கப்பட்டது. மேற்படி சடங்கை தாளையடி கட்டளைக் குரவர் வண. ஏ. லெபோண் சுவாமியார் நடாத்தி வைத்தார்

## சுப்ரீம் கோர்ட்டுக்கு பாரம்

மல்லாகம் சனி

சுன்னாகம் மயானக்கொலை வழக்கு விசாரணை முடிவடைந்ததையடுத்து மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமிவழக்கை சுப்ரீம் கோட்டுக்குப் பாரப் படுத்தியுள்ளார். எதிரியின் கைவில்ல் அடையாளத்தை பதிவு செய்யும்படி உத்தரவிட்ட நீதிபதி தொடர்ந்து எதிரியை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்:

"தோட்டத்தொழிலாளிகளின் தினசரிச் சம்பளம் அவர்களது உணவுக்குக் கூடப் போதமலிருப்பது அசட்டை பண்ணக்கூடிய ஒரு விஷயமல்ல. உணவுக்கே காணாத ஒரு நிலையில் அவனது தினசரிச்செலவுகளை எவ்விதம் சமாளிக்க முடியும்? ரேஷன் குறைப்புக்காரணமாக தோட்டத்தொழிலாளிகள் தினசரி35 சதத்துக்கு அதிகமாகச் செலவழிக்க வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளனர். நாட்டின் இறப்பு விகிதம் ஏனைய பகுதிகளிலும் பார்க்க தோட்டத்திலேயே அதிகமாகியுள்ளது போஷாக் இல்லாமை, சுகாதாரக்குறைவு ஆகியனவையே இதற்குரிய காரணமாகும்"

இவ்வாறு தேயிலைச் சம்பள நிர்ணயசபை மாநாட்டில் சம்பள சபை அங்கத்தவரான ஐ தோ கா தலைவர் திரு ஏ அஸீஸ் பேசுகையில் கூறினார்.

தோட்டத் தொழிலாளருக்கு தினமொன்றுக்கு 97 சதம் சம்பள உயர்வு வேண்டுமெனக்கோரி திரு ஏ அசீசும், திரு எஸ் துரைசாமிநாயுடுவும்ஒரு தீர்மானத்தைச்சமர்ப்பித்தனர்.

திரு அஸீஸ் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

தோட்டத் தொழிலாளி எப்போதுமே ஒரே சீரான கஷ்டமனுபவிக்கிறான் அவனது உழைப்பு அவனுக்கு பலன்தரவில்லை தேயிலைத் தொழில் முழுமையாகத் தோட்டத் தொழிலாளியிலேயே தங்கியிருக்கிறது இந்த நிலையில் தோட்டமுதலாளிமார் தொழிலாளர் சம்பளத்தை உயர்த்த முடியாதெனச் சாதிப்பது அர்த்தமில்லாததாகும்

"தொழிற் கமிஷனரின் நிர்வாக அறிக்கைப்பிரகாரம் தோட்டத் தொழிலாளி மாதமொன்றுக்கு சராசரி 18 நாள் வேலை பெறுகிறான் இதின் அடிப்படையில் கணக்கிட்டுபார்க்கும் போது இன்று தோட்டத் தொழிலாளி செலவுகளை ஓரளவு சரிக்கட்ட தினசரிசம்பளத்தில் 97 சதம் அதிகம் பெற வேண்டியதே நீதி" எனக் குறிப்பிட்டார் திரு.அஸீஸ்.

## நெடுந்தீவுக்கு பஸ் அனுப்பப்பட்டது

அல்லைப்பிட்டி, சனி

நெடுந்தீவு மக்களின் போக்குவரத்துக்கஷ்டத்தைப்போக்கு வதற்கு மேலதிக பஸ் வண்டியொன்று நெடுந்தீவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே அங்கு உள்ள ஒரே ஒரு பஸ்ஸுடன் இதுவும் சேவையில் ஈடுபடுவதினால் இப்பகுதியில் நிலவி வந்த போக்குவரத்து கஷ்டம் நீங்குமெனக்கருதப்படுகிறது.

## தபால் சேவகரை நியமிக்கவும்

மண்டைதீவு சனி

மண்டைதீவுக்கு மேலும் ஒரு தபாற்சேவகரை நியமித்து இப்பகுதியில் நிலவி வரும் கஷ்டங்களை நீக்கும்படி மண்டைதீவு கிழக்கு கிராமமுன்னேற்றச் சங்கம் வடபகுதிதபால்தந்தி அத்தியட்சகரிடம்கேட்டுக்கொண்டுள்ளது.

இங்கு ஒரேயொரு தபால் சேவகர் மாத்திரம் கடமையாற்றுவதால் அவசரத் தபால்களை விநியோகிப்பதில் பெரும் தாமதம் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கி. மு சங்கத்தின் தீர்மானங்களின் பிரதிகள் தீவுப்பகுதி எம். பி. திரு வி. நவரத்தினத்துக்கும் வடபகுதி தபால் அதிபருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## தபால் பைகளை சுமந்து சென்ற கி. ச. உபதலைவர்

மண்டைதீவு, சனி

நேற்றுமுன்தினம் ஊர்காவற்றுறையிலிருந்து தீவுப்பகுதி தபால் சேவையில் ஈடுபட்ட 'கமலாவதி' என்ற மோட்டார் படகு எழுவைதீவுக்கரையில் பல மணிநேரம் பலபிரயாணிகளுடன் தாமதிக்கவேண்டிய நிலை ஏற்பட்டதாம்.

எழுவைதீவு தபால் பகுதியினர் குறிப்பிட்ட நேரத்துக்கு தபால் பைகளைப்பெற வராததே இதற்குக்காரணமெனக் கூறப்படுகிறது. பிரயாணிகளையும் ஏற்றிவைத்துக்கொண்டு பலமணிநேரம் சுணங்கிய படகுக்காரர் இறுதியில் எழுவைதீவுகிராமசபை உபதலைவரிடம் தபால் பைகளைக் கையளித்துச்சென்றனராம்.

## சிறப்பு விற்பனை நிலையம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வலிமேற்கு பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் சிறப்புவிற்பனை நிலையமொன்றை இலங்கை உரக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. மகிந்தா சில்வா இம்மாதம் 15-ம் திகதி மாலை திறந்துவைப்பார். சங்கானைச் சந்தைக்கருகிலுள்ள புதிய கட்டடத்தில் இவ்விற்பனை நடைபெறும்.

கண்டதாகவும் எவரும் கூறுவாரில்லை. சாதாரணமாக ஆயிரம், லட்சக் கணக்கில் எங்கேயாவது கொள்ளையோ களவோ நடந்துவிட்டால் இக்காலத்தில் எப்படியோ அது வெளிவந்துவிடுகிறது. அப்படியாயின், கோடானுகோடி திரவியங்களை புதையல் எடுக்கும் விஷயம் இரண்டாம் பேர் வழிக்குத் தெரியாமல் அவ்வளவு மூடுமந்திரமாக ஒப்பேறியிருக்க முடியுமா?
முடியுமா?

சில வருடங்கள் கழித்து வேறொரு விதமான பீதி நாட்டைக் குலுக்கியது. நல்ல வேளையாக இதனுடைய மர்மம் துலக்கப்பட்டு விட்டது. திடீர் திடீரென்று சிறுவர்கள் காணமற்போய் விட்டார்கள். சில நாட்களுக்குப்பின் அவர்கள்தோற்றப்பட்டு, பெரிய முதலாளி ஒருவர் காரில் அழைத்துப் போனதாகவும் மீன்பிடி வாடிகளில் வைத்து தங்களை கசக்கிப் பிழிந்து வேலை வாங்கியதாகவும், கஷ்டம் தாங்காமல் தாங்கள் தப்பியோடிவந்து விட்டதாகவும் இச்சிறுவர்கள் தெரிவித்தார்கள். இந்தளவில் அவர்கள் உயிருடன் திரும்பியது போதும் என்று பெற்றோர் நினைத்தார்கள்

பொருளாதார முடை, வீட்டிலே அதிருப்தி, தன்னால் தனியாகவே எதையும் செய்துமுடிக்கலாம என்ற ஒரு போலித் துணிவு, சும்மா முஸ்பாத்தி-இவற்றில் ஏதாவதொரு காரணம் சிறுவர்களையும் சிறுமிகளையும்

களில் இருந்து இறக்குமதி செய்யவியலாது.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சர்களின் வார இறுதிக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.


கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் முன்னர் ஆட்சி மன்ற அங்கத்தவர்களுக்கு கார்கள் இறக்குமதி செய்யப்படவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. இதுசம்பந்தமான விவாதத்தின் போதே அமைச்சர்கள் மேற்கண்டவாறு தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.

## தொழில் நுட்ப மாணவர் மன்றம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் மன்றத் தேர்தல் வாக்களிப்பு பாராளுமன்ற தேர்தல் முறையில் அமைந்திருந்தது, முடிவுகள் பின்வருமாறு:-

தலைவர்: செல்வன் த. முத்துக்குமாரசாமி, உபதலைவர்: செல்வன் ஜே. ஜி. இராசேந்திரம், செயலாளர்: செல்வன் கு. சண்முகலிங்கம், உபசெயலாளர்: செல்வி. த. மகேஸ்வரி, பொருளாளர்: செல்வன் மு. நல்லதம்பி. விளையாட்டுத்துறைச் செயலாளர்: அ. அ. மஹ்மூத் மரைக்கார், பத்திராதிபர் [தமிழ்துறை]: செல்வன் சி. பொன்னம்பலம், பத்திராதிபர்[ஆங்கிலத்துறை] செல்வி பி. குறே.



கொழும்பு மொஹிடீன் மஸ்ஜித் வீதியைச் சேர்ந்த செல்வி நோனா ரோகினா புறாக் பொண்ட் சிலோன் லிமிட்டெட் ஸ்தாபனதுணைத்தலைவர் திரு.ஜே. ஜெயலிங்கத்திடமிருந்து பரிசில் ஒன்றைப் பெறுகிறார். புறாக்பொண்ட் கோரு தூள் தேயிலைப் போட்டியில் இவர் இரண்டாவது பரிசிலைத்தட்டிக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org